மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 7 • ஜனவரி 2024 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI


## எண்ணங்கள்



இனிய புத்தாண்டு
பொங்கல்
வாழ்த்துகள்




# புதிய ஆரம்பம் சிறப்பிதழ்


RAMRAJ
COTTON
WHITE SHIRTS
WHERE
PERFECTION
MEETS
DIGNITY
Available @ Ramraj Showrooms &
All leading textile shops
Shop online @ www.ramrajcotton.in
SCAN QR CODE
FOR STORE LOCATION

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

ஒரு செயலை நம்பிக்கையாகத் தொடங்கி,
எந்தச் சூழலிலும் அதில் முன்னேறிச் சென்று,
மகிழ்ச்சியும் வெற்றியும் அடைய வழிகாட்டும்




# புதிய ஆரம்பம்
## சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

'நல்ல தொடக்கமே பாதி வெற்றி' என்பார்கள். என்னைப் பொறுத்தவரையில் நம்பிக்கையான தொடக்கமே பாதி வெற்றி. நீங்கள் ஆயிரம் அடி எடுத்து வைத்தால்தான் இலக்கை அடைய முடியும் என்ற சூழல் இருக்கலாம். ஆனால் நம்பிக்கையுடன் முதல் அடியை எடுத்து வைக்கத் தயாராக இருந்தால் அந்தப் பயணத்திற்கு ஒரு புதிய ஆரம்பம் கிடைத்துவிடும்.

ஒவ்வோர் அடியாக ஆயிரம் முறை நகர்ந்தால் மட்டுமே ஆயிரம் அடி ஓட்டத்தைக் கடக்க முடியும். முதல் அடியை எடுத்து வைக்கமால் எதுவுமே நகராது. சிறிய சிறிய வெற்றிகள் ஒரு பெரிய வெற்றியைப் பரிசளிக்கும். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொள்ளவும், வெற்றியை அடையவும் ஒரு வீரர் தினம் தினம் தன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு செயலின் ஆரம்பமே தனித்துவம் வாய்ந்தது. எதிர்காலச் சாதனைக்கான ஆரம்பம் எங்கிருந்து, எப்படித் தொடங்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. உலகின் எல்லாச் சாதனைகளுக்கும் ஓர் ஆரம்பம் நிச்சயம் உண்டு. தங்களுக்கு நேர்ந்த அவமானத்தைத் தனக்கான தனிப்பட்ட அவமானமாகக் கருதாமல், தன்னைப் போன்று பாதிக்கப்படும் அனைவருக்குமான அவமானமாகக் கருதிய இருவர் உலகின் மாபெரும் தலைவர்களாக வரலாற்றில் இடம்பெற்றனர்.

இங்கிலாந்திற்குச் சென்று படித்து வழக்கறிஞராக உயர்ந்து, தென்னாப்பிரிக்காவில் வெற்றிகரமாக இயங்கினார் காந்தி. உழைத்துச் சேர்த்த பணத்தில் ரயிலில் போவதற்கு முதல் வகுப்பு டிக்கெட் எடுத்துப் பயணித்த காந்தியை, 'உன்னைப் போன்ற அடிமைகளுக்கு எங்களுடன் ஒன்றாக அமர்ந்து பயணிக்கத் தகுதி இல்லை' என்று பாதிப் பயணத்தில் இறக்கிவிட்டனர் வெள்ளையர்கள்.

ஆறாத அவமானத்தைக் காந்திக்கு இந்த நிகழ்வு ஏற்படுத்தியது. 'நன்றாகப் படித்து வெற்றிகரமாகத் தொழில் செய்யும் நமக்கே இந்த நிலைமை என்றால், இந்தியாவில் வாழும் சொந்தக் குடிகளுக்கு எத்தகைய அவமானங்கள் நிகழும்' என்று யோசித்த கணத்தில் காந்தியடிகளின் புதிய பயணம் ஆரம்பித்தது.

அமெரிக்காவில் ஒரு பேருந்தில் முறையாக டிக்கெட் எடுத்துப் பயணம் செய்தான் ஒரு சிறுவன். பாதி வழியில் வெள்ளையர்கள் பேருந்தில் ஏறியபோது, 'நீ எங்களோடு சரி சமமாகப் பயணிக்க முடியாது' எனச் சொல்லி அவனை இறக்கிவிட்டனர். 'எந்த வகையில் வெள்ளையர்களைவிட நான் குறைந்து போய்விட்டேன்' எனக் கோபம் அடைந்தான் அந்தச் சிறுவன்.

'இது எனக்கு மட்டும் ஏற்பட்ட அவமானமா? என்னைப் போலக் கறுப்பினத்தவராகப் பிறந்த ஒவ்வொருவரையும் இப்படிதானே பாதி வழியில் இறக்கிவிடுவார்கள். அவர்களுக்காகவும் நாம் போராட வேண்டும்' என்று தன்னுடைய அவமானத்தைப் பிறரின் அவமானமாகக் கருதிய கணத்தில் மார்ட்டின் லூதர் கிங் ஆரம்பித்த புதிய புரட்சிப் பயணம் தொடங்கியது.

புதிய ஆரம்பத்தைத் தரக்கூடிய தருணம் எது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் ஆரம்பம்கூட இதுபோல இரண்டுவிதமான அவமானங்களில் இருந்துதான் தொடங்கியது. ஒன்று எனக்கு நேர்ந்த அவமானம். இன்னொன்று, நான் மானசீகமாக மதித்துப் போற்றுகிற நெசவாளர்களுக்கு ஏற்பட்ட அவமானம்.

கடினமாக உழைத்து வேட்டியை நெய்து கொண்டுவந்து ஜவுளி நிறுவனத்தில் கொடுத்துவிட்டு, கூலிப்பணம் வாங்க நாள் முழுக்க, கடையின் வாசலோரம் அமர்ந்திருக்கும் நெசவாளர்களைக் கண்டு வருத்தம் அடைந்திருக்கிறேன். 'நெசவு செய்த உடைகளைக் கொடுத்த பிறகு, அதை வாங்கியவர்கள் உடனே பணம் கொடுத்தால் அவர்கள் வீட்டுக்குப் போய் வேலையைப் பார்க்க முடியுமே! எதற்காகத்



தேவையில்லாமல் நாள் முழுக்க காத்திருக்க வேண்டும்' என்ற கேள்வி எனக்குள் வந்துகொண்டே இருந்தது.

உழைப்புக்குரிய ஊதியத்தை உடனே கொடுத்தால், அவர்கள் வேறு கடைகளில் சென்று விசாரித்து ஒரு வேட்டி எத்தனை ரூபாய்க்கு வாங்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்வார்கள் என்கிற அற்பக் காரணத்துக்காக, நாள் முழுக்க கடைக்கு வெளியே காத்திருக்க வைக்கப்பட்டனர். நம் அனைவரின் மானத்தையும் மறைக்க உடைநெய்து தருகிற நெசவாளர்கள் மேல்சட்டை போட வசதி இல்லாமல் இப்படி உட்கார வைக்கப்படுவதை மாற்ற வேண்டும் என்கிற வேட்கை மனதில் எழுந்தது.

அதேபோல ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலுக்கு நண்பர்களுடன் சென்றபோது, நான் வேட்டி கட்டியவன் என்கிற ஒரே காரணத்திற்காக உள்ளே செல்ல அனுமதி மறுத்தனர். 'நான் நமது பாரம்பரிய வேட்டியை மட்டுமே உடுத்துவேன்' என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. எனக்குத் தார்மீக கோபம் வந்தது. இதேபோன்ற ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் என்னை எழுந்து நின்று 'வருக.. வருக..' என வரவேற்கச் செய்ய வேண்டும் என உறுதி எடுத்தேன்.

'வெளிநாட்டில்கூட நம் பாரம்பரிய உடைக்கு மரியாதை இருக்கும். ஆனால் உள்நாட்டில் மதிப்பு இல்லாமல் போய்விட்டதே' என அவநம்பிக்கை கொள்ளாமல், 'வேட்டி கட்டிய மனிதரை மதிப்பிற்குரியவராக கருதும் நிலையை உருவாக்க வேண்டும்' என்று உறுதி ஏற்று உழைக்கத் தொடங்கினேன்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் அஸ்திவாரம், வலுவான ஆரம்பம், இந்த இரு நிகழ்வுகளும்தான். ஒரு கட்டடம் கட்டும்போது, முதலில் வலுவான அடித்தளத்தை உருவாக்குவதைப் போல ஒரு காரியத்தின் தொடக்கம் அமைய வேண்டும். சரியான அடித்தளம் இல்லாத கட்டடம் உறுதியாக இருக்காது. நம்பிக்கையான ஆரம்பம் இல்லாத செயலும் வெற்றியை நோக்கி நகராது.

பொதுவாக மனிதர்களுக்கு ஒரு செயலைத் தொடங்குவதற்குத் தயக்கமும் அச்சமும் அதிகம் இருக்கும். 'இது வெற்றிகரமாக அமையுமா?' என்கிற சந்தேகத்துடன் இருப்பார்கள். அதனாலேயே உரிய நேரத்தில் தொடங்காமல், தயங்கித் தாமதப்படுத்தி முக்கியத் தருணத்தைத் தவற விட்டுவிடுவார்கள். உலகப் புகழ்பெற்ற தத்துவ அறிஞர் பிளாட்டோ, 'சாக்குப் போக்கு சொல்லாமல் முதலில் ஒரு காரியத்தை ஆரம்பிக்க வேண்டும்' என்று வலியுறுத்திச் சொன்னார்.

நீச்சல் கற்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் அடிப்படைப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தண்ணீரில் குதிக்க வேண்டும். நடக்க வேண்டும் என்கிற ஆர்வம் கொள்ளும் ஒரு குழந்தை, தனக்கு நடக்கத் தெரியாது என்பதையோ, தான் இதற்கு முன்பு நடந்ததே இல்லை என்பதையோ நினைத்துக் கவலைப்படாது. தன் முதல் அடியை நம்பிக்கையுடன் எடுத்து வைக்கும். கீழே விழுந்தாலும் மீண்டும் ஆர்வத்துடன் அடுத்த முயற்சியை ஆரம்பிக்கும்.

தொடங்கும் காரியத்தில் சிறுசிறு சறுக்கல்கள், பின்னடைவுகள், தடைகள் வரலாம். அவை அனைத்தும் நாம் அடையப் போகிற பெரிய வெற்றியின் அடையாளங்கள். புதிய ஆண்டில் நம்பிக்கையுடன் புதிய முயற்சிகளைத் தொடங்குவோம்.

எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், 'வெண்மை' வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

# புதிய ஆரம்பம் கிடைக்கும்!

ஒரு பெரிய நிறுவனத்தில் சீனியர் மேனேஜர் பொறுப்பில் இருந்தார் மகேஷ். நூற்றுக்கணக்கான பணியாளர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாங்கும் பதவியில் இருந்தாலும், அவர் யாரிடமும் கோபப்பட்டு அலுவலகத்தில் யாரும் பார்த்ததில்லை. எவ்வளவு நெருக்கடியான சூழலிலும் உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளை அள்ளி இறைத்ததில்லை. முதலாளியிடம் காட்டும் அதே கனிவைச் சாதாரண அலுவலக உதவியாளரிடமும் காட்டுவார். அதே சமயத்தில் மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் எந்தக் குறையும் வைத்ததில்லை. அவர் மீது எல்லோரும் அவ்வளவு மரியாதை வைத்திருந்ததால், அவர் என்ன வேலை சொன்னாலும் உடனே முடித்துவிடுவார்கள்.

அவர் ஓய்வுபெற்ற நாளில் அத்தனை ஊழியர்களும் கண்ணீருடன் வந்து அவருக்குக் கைகுலுக்கி வழியனுப்பி வைத்தனர். முதலாளி அவரைக் கூப்பிட்டு, “உங்களுக்குக் கோபமே வராதா? எப்படி உங்களால் இத்தனை ஆண்டுகள் இவ்வளவு நிதானமாக வேலை வாங்க முடிந்தது?” என்று கேட்டார். மகேஷ் சொன்ன பதில், எல்லோருக்குமான பாடம்.

“என் அப்பா ஒரு நிறுவனத்தில் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்தார். வெளியில் எங்காவது செல்லும்போது என் அப்பாவுக்கு மற்றவர்கள் தரும் மரியாதையைப் பார்த்து, அப்பா வலிமையானவர், சக்தி வாய்ந்தவர் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. அவரை என் ரோல் மாடலாகக் கருதினேன்.

ஒருநாள் கல்லூரி சீக்கிரமே முடிந்ததால், அப்பாவைப் பார்க்கலாம் என்று அவரிடம் சொல்லாமல் அவர் அலுவலகம் போனேன். உள்ளே போனபோது நான் பார்த்த காட்சி என்னை நொறுங்க வைத்தது. நிறுவனத்தின் முதலாளி என் அப்பாவை உரத்த குரலில் திட்டிக்கொண்டிருந்தார். அலுவலகத்தில் அத்தனை பேர் எதிரிலும் அது நடந்தது. அப்பா தலைகுனிந்து நின்றிருந்தார். முதலாளி அறையிலிருந்து திரும்பும்போது அப்பாவின் கண்களில் கண்ணீர். வலிமையானவர் என்று நான் நினைத்திருந்த அப்பா அழுதுகொண்டிருந்தார். ஆறுதல் சொல்லக்கூட யாருமின்றி அவர் தவிப்பதைப் பார்த்த என்னால் என் கண்களை நம்ப முடியவில்லை. அந்தச் சூழலில் என்னைப் பார்த்தால் அவர் இன்னும் உடைந்துவிடுவார் என்பதால், அவர் கண்ணில் படாமல் அமைதியாக வீட்டுக்கு வந்துவிட்டேன்.

அன்று நான் ஒரு முடிவெடுத்தேன். ‘நாளை நான் என்ன வேலைக்குப் போனாலும், சொந்தமாகத் தொழில் நடத்தினாலும், அப்பாவுக்கு அவர் முதலாளி செய்ததை நான் எப்போதும் செய்துவிடக்கூடாது’ என்பதே அந்த முடிவு. ஏனென்றால், எல்லா ஊழியர்களுக்கும்



மகன்களும் மகள்களும் இருக்கிறார்கள். தங்கள் தந்தை வலிமையானவர் என்று அவர்களும் நினைக்கக்கூடும். அவர்களின் நம்பிக்கையை நொறுங்கச் செய்துவிடக்கூடாது என்று தீர்மானித்தேன். அப்படியே என்னால் இருக்கவும் முடிந்தது” என்றார் மகேஷ்.

எந்த முடிவிலிருந்தும், எப்படிப்பட்ட தீர்மானத்திலிருந்தும் ஒரு புதிய ஆரம்பம் பிறக்கிறது. ஒரு புதிய மனிதராக மாறி, புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க நீங்கள் சில மாற்றங்களுக்குத் தயாராக வேண்டும். அவை:

● உங்களுக்கு என்ன தேவை என்பதை முதலில் தீர்மானியுங்கள். வாழ்க்கையில், வேலையில், தொழிலில், வியாபாரத்தில் மாற்றம் வேண்டும் என்பதற்காகப் புதிதாக ஒன்றைச் செய்யலாம். அல்லது வேறு வழியின்றிப் புதிய ஆரம்பத்துக்கு நீங்கள் தள்ளப்பட்டிருக்கலாம். சூழல் எதுவாக இருந்தாலும், இந்த ஆரம்பம் மூலம் நாம் என்னவாக ஆக விரும்புகிறோம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதற்கு முதலில் என்ன செய்வது உதவும் என்பதையும் கண்டறிய வேண்டும். சரியான இலக்குகளுடன் எதையும் ஆரம்பித்தால், நம்பிக்கையுடன் நடைபோட முடியும்.

● நீங்கள் செய்யும் செயலின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை மதிப்பிடுங்கள். லாப, நஷ்டங்களைக் கணக்கிட்டுப் பாருங்கள். இந்தச் செயல் மூலம் நாம் அடையப்போவது அதிகமா, இழப்பது அதிகமா என்று சீர்தூக்கிப் பாருங்கள். எதிர்பாராத இழப்புகள் ஏற்பட்டால் எப்படிச் சமாளிப்பது என்பதையும் திட்டமிடுங்கள்.

● வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிப்பது சுலபம் என்றால், எல்லோரும் தினம் தினம் அதைச் செய்துகொண்டே இருப்பார்கள். அதில் நிறைய தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும். வாழ்க்கையில் ஏற்படும் எதிர்பாராத மாற்றங்களுக்குப் பழக வேண்டும். தடைகளை எப்படிச் சமாளிப்பது, வாழ்க்கை மாற்றங்களுக்கு நாம் தயாராக இருக்கிறோமா என்றெல்லாம் யோசித்து முடிவெடுங்கள். இல்லாவிட்டால் நம் மனத்தடையைத் தாண்டவே நம்மால் முடியாது.

● கைவசம் சரியான திட்டங்கள் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. என்னென்ன செய்யப் போகிறோம், அதையெல்லாம் எப்படிச் செய்யப் போகிறோம், அதற்கு என்னவெல்லாம் தேவை, யாரெல்லாம் உதவி செய்வார்கள், இதற்காக நம் வாழ்க்கையில் என்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று ஒவ்வொன்றையும் திட்டமிடுங்கள். எதிர்பாராத பின்னடைவுகள் ஏற்பட்டால் எதையெல்லாம் மாற்ற வேண்டும் என்பதையும் முன்கூட்டியே யோசித்து வையுங்கள். எந்தச் சூழலிலும் தடுமாற்றம் ஏற்படாது.

● இத்தனை நாட்களாக எப்படி இருந்தீர்களோ, அப்படியே இருந்துகொண்டு புதிதாக எதையும் சாதிக்க முடியாது. வாழ்க்கையில் தலைகீழ் மாற்றங்களுக்குத் தயாராகுங்கள். புத்தம் புதிதாக மலர்ந்த ஒரு பூப்போல உங்களின் ஒவ்வொரு நாளும் புத்துணர்வுடன் இருக்க வேண்டும். நேர்மறைச் சிந்தனையுடன் எதையும் செய்ய வேண்டும். செய்யும் செயல் எதுவாக இருந்தாலும், அதில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும்.

● உங்கள் கவனம் உங்கள் மீது மட்டுமே இருக்க வேண்டும். அடுத்தவர்களிடம் என்னவெல்லாம் இருக்கின்றன, அவர்கள் எதையெல்லாம் சாதித்தார்கள் என்றெல்லாம் பார்த்துவிட்டு, ‘நாம் இதற்கெல்லாம் தகுதியில்லையா’ என்று நினைத்தால் நம்பிக்கை தளர்ந்துவிடும். உங்களிடம் இருப்பதை வைத்துச் சிறப்பாக என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்யுங்கள். உங்கள் திறமைக்கான வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

● புதிதாக ஒரு விஷயத்தைத் தொடங்குவதற்கோ, செய்வதற்கோ எப்போதும் பயப்படாதீர்கள். எதைச் செய்ய ஆரம்பித்தாலும், மகிழ்ச்சியாகச் செய்யுங்கள். நல்ல விளைவுகளுக்காகப் பொறுமையுடன் காத்திருங்கள். உங்கள் சூழ்நிலை தெரியாமல் அடுத்தவர்கள் பேசும் பேச்சுகளுக்குக் காது கொடுக்காதீர்கள். உங்களால் நிச்சயம் ஜெயிக்க முடியும். ●



## எதை ஆரம்பிக்கிறோம்?

சரிவான மலைப்பாதையில் ஒரு பாறையை உருட்டி உயரத்தை நோக்கித் தள்ளிச் சென்றால், கொஞ்ச நேரத்தில் அது சரிந்து மீண்டும் தரைக்கு வந்துவிடும். மீண்டும் அதை மேலே இழுத்துச் சென்றாலும் அதே நிலைமைதான். தொடர்ந்து அந்த முயற்சியைச் செய்வதைவிட அபத்தம் வேறு எதுவும் இல்லை. நிறைய பேர் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்ப ஆரம்பித்து இப்படித்தான் தோற்றுப் போகிறார்கள்.

ஒரு நிறுவனத்தில் எதிர்பாராமல் நஷ்டம் ஏற்பட, அங்கு வேலை பார்த்த இரண்டு பேரைப் பணிநீக்கம் செய்தது நிறுவனம். முதல் ஊழியர் சோகமாக வந்து தன் இருக்கையில் அமர்ந்து, “மறுபடியும் வேலை தேட வேண்டிய துயரநிலை எனக்கு வந்துவிட்டதே” என்று புலம்ப ஆரம்பித்தார். இரண்டாவது நபரோ தன் நாற்காலியில் அமர்ந்து, பரபரப்பாக எதையோ ரெடி செய்ய ஆரம்பித்தார். “இந்தச் சூழலிலும் வேலை செய்கிறாயா?” என்று அவரிடம் முதல் நபர் கேட்க, “இல்லை, என் பயோ டேட்டா ரெடி செய்கிறேன். இதைவிடச் சிறந்த ஒரு வேலையைத் தேடுவதற்கான ஆரம்பம் என இதை நினைக்கிறேன்” என்றார். எதை ஆரம்பிக்கிறோம் என்பது முக்கியம்.



## மாற்றமும் ஆரம்பமும்!

ஒருவர் தன் செயல்பாடுகள் எல்லாவற்றிலும் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தினால்தான் அவரால் புதிதாக எதையும் ஆரம்பிக்க முடியும் என்று சிலர் சொல்வார்கள். ஆனால், ஒருவர் தன் இயல்புகளை எல்லாம் மொத்தமாகத் தூக்கி எறிந்துவிட்டுப் புதிதாக மாறமுடியாது. ஒரு கூட்டுப்புழு பட்டாம்பூச்சியாக உருமாறுவது போல, இப்போது இருப்பதைவிடச் சிறந்த மனிதராக உயர்வு அடைவதுதான் சாத்தியம். அந்த உயர்வு அவருக்குப் புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையைக் கொடுக்கும்.

புதிய ஆரம்பத்துக்கான முயற்சியில் இருக்கும்போது சில விஷயங்களை மறக்கக்கூடாது. உங்களின் பலவீனங்களை உணர்ந்துகொள்ளுங்கள். அவற்றை உடனடியாக உங்களால் மாற்ற முடியாது. ஆனால், உங்கள் செயல்பாட்டை அவை தடுத்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் பலம் எது என்று உணர்ந்து, அதற்கு ஏற்றபடி செயல்படுங்கள். உங்கள் விருப்பமும் ஆர்வமும் திறமையும் என்ன என்பதை அறிந்து, அதிலிருந்து ஆரம்பியுங்கள்.

## நிகழ்காலத்தில் மகிழ்ச்சி!

மூன்று மனிதர்கள் ஒரு பழுதடைந்த மரப்பாலத்தின் மீது நடந்துகொண்டிருந்தார்கள். வேகமாக அடித்த காற்றில் பாலம் மோசமாக ஆட, பாலத்தின் ஓரமாக நடந்த மனிதன் வேதனைப்பட்டான். இப்படிச் செத்துச்செத்துப் பிழைப்பதைவிட, கீழே ஓடும் ஆற்றில் குதித்துவிடலாம் என்று அவன் நினைத்தான். பாதுகாப்பாக நடுவில் நடந்த இரண்டாவது மனிதனோ, பாலம் உடைந்து கீழே விழுந்து விடுவோமோ என்று பயந்தான். மூன்றாவது மனிதன், பாலத்தின் ஓரமாக நடந்தபடி, ஆற்றின் அழகை ரசித்தான்.

இவர்களில் முதல் மனிதன் கடந்த காலத்தில் வாழ்கிறான். வாழ்வின் கசப்பான தருணங்கள் மட்டுமே அவன் நினைவில் நிற்கின்றன. இரண்டாவது மனிதன், எதிர்காலம் குறித்து கவலைப்படுகிறான். எல்லா நேரமும் அவன் பயத்திலேயே மூழ்கியிருக்கிறான். மூன்றாவது மனிதனே நிகழ்காலத்தில் வாழ்கிறான். கடந்ததையும் வருவதையும் நினைக்காமல், இந்தக் கணத்தின் மகிழ்ச்சியை அனுபவித்தபடி எதையும் செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்று அவன் உணர்த்துகிறான்.





## ஆரம்பம் அவசியம்!

வர்ஜின் அட்லாண்டிக் நிறுவனத்தின் தலைவர் ரிச்சர்ட் பிரான்ஸன். கிட்டத்தட்ட 400 நிறுவனங்களுக்குச் சொந்தக்காரர் அவர். ஆனால், அவரின் ஆரம்ப காலம் பிரகாசமானது இல்லை. கற்றல் குறைபாடு கொண்ட அவரால் பள்ளியில் நன்கு படிக்க முடியவில்லை. 16 வயதில் பள்ளியைவிட்டு நின்ற அவர், மரம் வளர்க்கும் தொழிலை முதலில் ஆரம்பித்தார். பிறகு மாணவர்களுக்கான பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். அதற்காகவே விளம்பர நிறுவனம் தொடங்கினார். அடுத்து இசை நிறுவனம் தொடங்கினார். இளைஞர் சமூகத்துக்காகப் பல்வேறு பிசினஸ்களை அடுத்தடுத்து செய்தார்.

படிப்படியாக வங்கி, விமான நிறுவனம், பயண சேவை நிறுவனம், மருத்துவச் சேவை, மொபைல் போன் சேவை என்று சகல திசைகளிலும் அவர் பல நிறுவனங்களை உருவாக்கியபடி இருந்தார். அவர் சிறந்த மாணவரோ, மிகச்சிறந்த தொழில் நிர்வாகியோ கிடையாது. ஆனாலும் அவர் ஜெயித்தது எப்படி?

அவர் மிகச் சிறப்பாக எதையும் ஆரம்பிக்கத் தெரிந்து வைத்திருந்தார். வெறுமனே திட்டமிடாமல், அவற்றை உடனடியாகச் செயலாக மாற்றினார். வாழ்வில் எதைக் கனவு கண்டாலும், உடனே அதைச் செய்துவிடுங்கள். செயலில் இறங்காமல் எதுவும் மாறாது.

## ஆரம்பமும் தொடர் முயற்சியும்!

காட்டுப்பாதையில் நடந்துகொண்டிருந்த குரு, அருவி ஒன்றை ஒட்டியிருந்த ஒரு பாறையைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார். சிலை போலச் செதுக்கப்பட்டு இருந்தது அது. வியப்புடன் அதைப் பார்த்துக்கொண்டே இருந்தார். தன் சீடனை அருகில் கூப்பிட்டு அதைக் காட்டினார். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன குருவே?" என்றான்.

''இந்தப் பாறையின் மீது சொட்டும் நீர்த்துளிகளைப் பார்" என்றார். ஒற்றைச் சொட்டு நீர்த்துளி அந்தப் பாறை மீது விழுந்துகொண்டே இருந்தது. அது வேகமாகவும் விழவில்லை. "இது நமக்கு இரண்டு பாடங்களைத் தருகிறது தெரியுமா?" என்று மீண்டும் கேட்டார் குரு. சீடன் ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

"இந்த ஒற்றைச் சொட்டு நீர் காலம் காலமாக இந்தப் பாறை மீது விழுந்து, பாறையை அரித்து ஒரு சிலை போல வடிவம் மாற்றியிருக்கிறது. சிறிய முயற்சியாக இருந்தாலும், அதை ஆரம்பித்து, சோர்ந்துவிடாமல் தொடர்ந்து செய்துகொண்டே இருந்தால் வெற்றி நிச்சயம். இதை இன்னொரு விதமாகப் பார்... கடினமான இந்தப் பாறை, ஒற்றைச் சொட்டு தண்ணீர் அரித்ததில் பலவீனமாகிவிட்டது! வலிமையான மனிதர்களே, சின்னச்சின்ன பலவீனங்களுக்கு இடம்கொடுத்தால் வீழ்ந்துவிடுவார்கள். இந்த இரண்டு பாடங்களும் வாழ்க்கையில் முக்கியம்" என்றார். சீடனுக்கு இப்போது புரிந்தது.



வேலை, தொழில், வியாபாரம் என்று நீங்கள் எதைச் செய்தாலும் அதில் இரண்டு ஆரம்பங்கள் இருக்கின்றன. அதைக் கவனமாகப் புரிந்துகொள்பவர்களே வாழ்க்கையில் முன்னேறுகிறார்கள். முதல் ஆரம்பம் என்பது நீங்கள் ஒரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும் காலம். படிப்பை முடித்துவிட்டுத் தொழில் அல்லது வேலையை ஆரம்பிக்கும்போது அதில் பெரிய பலன்கள் கிடைக்காது. எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாலும், தொழிலில் கிடைக்கும் லாபம் குறைவாக இருக்கும். வேலையில் நம் உழைப்புக்கும் கிடைக்கும் சம்பளத்துக்கும் சம்பந்தமே இருக்காது.

ஆனால், இதற்காக விரக்தி அடையக்கூடாது. வியாபாரம் அல்லது தொழிலை நீங்கள் செய்தால், இதைக் கற்றுக்கொள்ளும் காலமாகக் கருதுங்கள். தொழிலின் நெளிவு சுளிவுகள், மக்களின் மனநிலை ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறீர்கள். இது ஒருவகை அனுபவச் சேகரிப்பு. வேலையில் சம்பளம் குறைவாக இருந்தாலும், நிறுவனம் உங்களிடம் ஒரு பயிற்சிக்கட்டணம் பிடித்துக்கொள்வதாக நினைத்துக்கொள்ளுங்கள். வருத்தம் இருக்காது.

பொறுமையாகக் காத்திருந்தால், சில ஆண்டுகளில் உழைப்புக்கேற்ற வருமானமோ, ஊதியமோ கிடைக்கும். அதுவரை உழைப்பிற்கும் ஊதியத்திற்கும் ஏணி வைத்தால்கூட எட்டாத வேறுபாடு இருப்பதாக வேதனைப்பட்டவர்கள், இப்போதோ தங்களின் உழைப்புக்கான பலனை அனுபவிப்பவர்கள். அந்தக் கட்டத்தில் பலரும் நிறைவடைந்து விடுகிறார்கள். 'இது போதும்' என்று தேங்கிவிடுகிறார்கள். கேளிக்கை, ஓய்வு என இருந்துவிடுகிறார்கள்.

ஆனால், அதுதான் அடுத்தக்கட்ட வளர்ச்சியை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டிய காலம். பூமியிலிருந்து கிளம்பி உயரே வந்துவிட்டோம் என்று ஒரு ராக்கெட் திருப்தி அடைந்தால் அது விண்வெளிக்குப் போகவே முடியாது. ஒவ்வொரு கட்டத்திலும் அது தன் வேகத்தை அதிகரிக்கிறது. காலியான எரிபொருள் கலன்களைக் கழற்றி விட்டுவிட்டு அது மேலே மேலே பாய்ந்து செல்கிறது. அதனால்தான் பூமியின் ஈர்ப்பு விசையை எதிர்த்துக்கொண்டு விண்வெளிக்குச் சென்று சாதிக்கிறது. அப்படித்தான் இரண்டாவது ஆரம்பத்தைச் செய்ய வேண்டும்.

தள்ளுவண்டியில் ஐஸ்க்ரீம் எடுத்துச் சென்று விற்ற ஒருவர், பிற்காலத்தில் சொந்தமாக ஐஸ்க்ரீம் செய்ய ஆரம்பித்துத் தனக்கென ஒரு பிராண்டு உருவாக்கிய வரலாறு உண்டு. கட்டடத் தொழிலாளியாக இருந்த ஒருவர் தன் தொழிலில் உயர்ந்து கட்டுமானத் தொழில் நிறுவனம் ஆரம்பித்தது உண்டு. ஒரு நிறுவனத்தில் சாதாரண கிளார்க் ஆக வேலையில் சேர்பவர், தன் திறமையான உழைப்பால் உயர்ந்து மேனேஜர் ஆவதும் உண்டு. சிரமங்களைச் சந்தித்த ஆரம்பக் காலத்தில் அனுபவங்களைச் சேகரித்த அவர்கள், அந்த அனுபவத்தை தங்கள் துறையில் முழுமையாக அப்போது பயன்படுத்துவார்கள். அந்த இரண்டாவது காலகட்டத்தில் அவர்கள் கொஞ்சமாக உழைப்பார்கள், ஆனால் அதிகம் சம்பாதிப்பார்கள்.

ஒருவர் தன் 20 வயதில் செய்த அதே வேலையை 60 வயதிலும் அதே மாதிரிச் செய்து, தன் வாழ்க்கையில் எந்த முன்னேற்றத்தையும் அடையாமல் இருக்கிறார் என்றால், அவர் தனக்கான இரண்டாவது ஆரம்பத்தைச் செய்யவே இல்லை என்று அர்த்தம். வாழ்வில் இரண்டு ஆரம்பங்களும் முக்கியம். எதையும் தவறவிடாதீர்கள். ●



# இரண்டு ஆரம்பங்கள்!

# பாரம்பரிய உடையைக் கொண்டாடுவோம்!

**ஜனவரி 1 – 7 வேட்டி வாரம்**

புத்தாண்டு, பொங்கல், தீபாவளி, பிறந்த நாள், திருமணம் என நம் மக்கள் மகிழ்ச்சியான அனைத்துத்தருணங்களிலும்வேட்டி அணிந்து கொண்டாடுகிறார்கள். அந்த வேட்டியை நாம் கொண்டாட வேண்டும் அல்லவா? அதற்காகவே வேட்டி வாரம். நம் தேசிய உடையான வேட்டியை மக்களின் பெருமிதமாக உணரச் செய்ய, ஜனவரி முதல் வாரத்தை 'வேட்டி வாரம்' என்று கொண்டாடுகிறது ராம்ராஜ் காட்டன்.

நம் குழந்தைகளுக்கு லிட்டில் ஸ்டார் வேட்டிகள், மேட்ச்சிங் மேட்ச்சிங் விரும்பும் இன்றைய 2கே கிட்ஸுக்காக வேட்டியின் பார்டர் நிறத்திலேயே சட்டையும் தரும் கல்ச்சர் கிளப் செட், இளைஞர்களுக்கு ஒட்டிக்கோ கட்டிக்கோ பாக்கெட் வேட்டிகள், பக்தியில் திளைக்கும் மூத்த வயதினருக்கு ஆச்சார்யா பஞ்சகச்சம் வேட்டிகள் என ஒவ்வொரு பருவத்தினருக்கும் ஒவ்வொருவிதமான வேட்டிகளை உருவாக்கித் தருகிறது ராம்ராஜ் காட்டன்.



உடலுடன் ஒட்டியது போல உடை அணிய விரும்பும் தலைமுறை வந்துவிட்டது. இவர்களுக்காகவே உருவானது, ராம்ராஜ் ஜென் நெக்ஸ்ட் அட்ஜஸ்டபிள் வேட்டி. வேட்டியின் பார்டருக்கு மேட்ச்சிங் நிறத்தில் சட்டையுடன் இது கிடைக்கும். யாரும் தங்கள் உடல் அமைப்புக்கு ஏற்றபடி அட்ஜஸ்ட் செய்து இதை அணிந்துகொள்ள முடியும்.

எதிலும் புதுமையை எதிர்பார்க்கும் இளைய தலைமுறைக்காக, காலத்துக்கு ஏற்ற மாற்றங்களைச் செய்கிறது ராம்ராஜ். நம் பாரம்பரிய உடையான வேட்டி, அப்படி எல்லா மாற்றங்களுக்கும் இடம்கொடுக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. எனவேதான் அது தமிழர்களின் பெருமிதமான அடையாளமாக நிரந்தரமாக இருக்கிறது.

திருமண மேடையில் மணமகன் அணிய லக்னா பட்டு வேட்டிகள், ஆன்மிக நிகழ்வுகளுக்கு அணிய பக்திமயமான வேட்டிகள் என்று நம் வாழ்வின் ஒவ்வொரு தருணத்துக்கும் பிரத்யேக வேட்டிகளை ராம்ராஜ் அளிக்கிறது. இதனால், பண்டிகைகள் மற்றும் விசேஷ தருணங்களில் நம் இல்லங்களில் ராம்ராஜ் நிரந்தரமான அங்கமாக மாறியிருக்கிறது.

'பாரம்பரிய உடைக்கு இனி எதிர்காலம் கிடையாது. அதை அணிபவர்களுக்கும் மதிப்புக் கிடைக்காது' என்கிற மாயையை உடைக்க, ராம்ராஜ் காட்டன் நிறுவனம் 41 ஆண்டுகளாகக் கடுமையாக உழைத்துவருகிறது. அதில் வெற்றியும் பெற்று இருக்கிறது. தமிழகத்தில் மட்டுமின்றித் தென்னிந்தியா முழுவதும் பெரிய நகரங்களில் வெண்மைக்கென்றே தனி ஷோரூம் திறந்து, வேட்டி விற்பனையை உயர்த்தி, மக்களின் மனதில் கம்பீரத்தின் அடையாளமாக வேட்டியை மாற்றிக் காட்டியிருக்கிறது ராம்ராஜ். வேட்டியைக் கண்டுபிடித்தது நம் முன்னோர்களில் யாரோ ஒருவராக இருக்கலாம். ஆனால், அதில் வித்தியாசம் காட்டி ஜெயித்தது ராம்ராஜ் காட்டன்.

வேட்டி அணிவது மதிப்புமிக்க அடையாளம். உணர்வோம்; மற்றவர்களுக்கும் உணர்த்துவோம்.




# புத்தாண்டில் புதிய ஆரம்பம்!

கடந்த ஆண்டின் 12 மாதங்களையும் எப்படிச் செலவழித்தோம் என்று அலசிப் பார்த்து, 2024 புத்தாண்டின் 12 மாதங்களில் என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடும் காலம் இது. புத்தாண்டு உறுதிமொழிகள், சபதங்கள் எல்லாவற்றையும் அதன் அடிப்படையில்தான் எடுக்கிறார்கள் பலர். 'நம்மால் இது முடியுமா' என்று சந்தேகப்படாமல், 'நமக்கு ஏன் இதைச் செய்யும் மன உறுதி இல்லை' என்று குற்ற உணர்வு அடையாமல், நினைத்த விஷயங்களை மகிழ்ச்சியுடன் செய்ய முடியும். அதற்கு, எளிய முறையில் உங்கள் வாழ்க்கையை மாற்றும் இதுபோன்ற சின்னச்சின்ன உறுதிமொழிகளை எடுங்கள்...

- பரபரப்பான வேலைகள், உங்களைச் சுண்டியிழுக்கும் பொழுதுபோக்குகள் ஆகியவற்றுக்கு மத்தியில் மாதம் இரண்டு புத்தகங்களாவது படிக்க உறுதிமொழி எடுங்கள். அவற்றில் ஒரு புத்தகம், உங்களது வேலை அல்லது தொழில் சார்ந்த முன்னேற்றங்களை அறியப் பயன்பட வேண்டும். இன்னொரு புத்தகம் உங்கள் மனத்தை வளப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாளிலும் சிறிது நேரமாவது படிப்பது, உங்கள் மூளைக்குப் புத்துணர்வு தருகிறது.

- இப்போது ஆன்லைனில் ஏராளமான பயிற்சிகள் தரப்படுகின்றன. உங்கள் வேலை சார்ந்து, அல்லது உங்களின் ஆர்வம் சார்ந்து ஏதேனும் ஒரு புதிய வகுப்பில் இந்த ஆண்டு சேருங்கள். அது உங்களுக்குப் புதிய அனுபவம் ஒன்றைத் தரும். கற்றுக்கொள்ளும் மனநிலை இருந்தால், நீங்கள் பக்குவம் அடைவீர்கள்.

- ஒவ்வொரு முறை கடைக்குச் செல்லும்போது புதிதாகப் பழங்கள் அல்லது காய்கறி வாங்கிவந்து சாப்பிடுங்கள். ஒவ்வொரு சீசனிலும் அதிகம் விளையும் பழங்கள் மற்றும் காய்கறிகளைச் சாப்பிடுவது, இதுவரை சாப்பிட்டுப் பார்க்காத பழம் அல்லது காய்கறி ஒன்றை முயற்சிசெய்து பார்ப்பது என்று உறுதிமொழி எடுங்கள்.

- கிரெடிட் கார்டு வைத்திருக்கும் பலரும், மாதா மாதம் ஒரு மெசேஜ் வந்ததுமே அதற்கான பணத்தைச் செலுத்திவிடுகிறார்கள். அல்லது தவணை முறையில் பணம் கட்டி கடன் வலையில் சிக்குகிறார்கள். ஒவ்வொரு மாதமும் கார்டு ஸ்டேட்மென்ட் வந்ததும், அதைப் படித்துப் பாருங்கள். எந்தெந்த விஷயங்களுக்கு அதிகம் செலவழித்தோம், எதையெல்லாம் தவிர்த்திருக்கலாம் என்று தெரியும். சிக்கனமாகச் செலவழிக்கும் பழக்கம் கைகூடும்.

- சில செயல்களைச் செய்வதற்கு நாம் பயப்படுவோம். ஆனால் அந்தச் செயல்கள் நமக்கு நன்மை தருவதாக இருக்கும். அப்படி இதுவரை பயந்து செய்யாமல் இருந்த ஒரு செயலை இந்த ஆண்டு செய்யப் போவதாகச் சபதம் எடுங்கள். அது உங்களைப் புதிய மனிதராக மாற்றும்.

- வாரத்தில் ஒருநாளாவது செல்போன், கம்ப்யூட்டர் என்று எல்லாவற்றையும் விட்டு ஒதுங்கிச் சில மணி நேரங்களாவது பிரேக் எடுங்கள். குடும்பத்துடன் உரையாடல்,

பூங்காவில் உலாவிவருவது, ஏதேனும் புத்தகம் படிப்பது என்று அந்த நேரத்தைச் செலவிடுங்கள்.

• வீடு, அலுவலகத்தில் உங்கள் டேபிள் என்று எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். அது மனத்துக்கு உற்சாகம் கொடுத்து வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்ய வைக்கும். குறிப்பிட்ட இடைவெளியில் சுத்தம் செய்வதை வழக்கமாக்குங்கள்.

• எதிர்காலத்துக்காக இதுவரை சேமிக்காமல் இருக்கிறீர்களா? இந்த ஜனவரியில் ஆரம்பித்து ஒவ்வொரு மாதமும் இவ்வளவு பணத்தைச் சேமிப்பேன் என்று உறுதிமொழி எடுங்கள். ஏற்கனவே சேமிக்கும் பழக்கம் வைத்திருப்பவர்கள், அந்தச் சேமிப்பை இன்னும் கூடுதலாக்க வழிகளைத் தேடலாம்.

• வயது ஏற ஏற உடல்நலத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். குறிப்பாக, ஒவ்வொரு நாளும் 20 நிமிடங்களாவது வாக்கிங் போக உறுதி எடுங்கள். நேரத்தைச் செலவழிப்பதைத் தவிர இதற்கு வேறு எந்தச் செலவும் இல்லை. உடலுக்குச் சூரிய ஒளியும், சுவாசத்துக்குத் தூய்மையான காற்றும் இதில் கிடைக்கும். உடலும் உறுதியாகும். தினமும் சில நிமிடங்கள் தியானம் செய்வதும் மனத்துக்கு நன்மை தரும்.

• இரவில் நீண்ட நேரம் கண்விழித்துத் தொலைக்காட்சி பார்க்காமல், சமூக வலைதளங்களில் பொழுதுபோக்காமல், தினமும் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கச் செல்வது என்று உறுதி எடுங்கள். போதுமான தூக்கம் உடல்நலனுக்கும் மனநலனுக்கும் நல்லது. சரியாக ஓய்வெடுத்தால்தான் வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்ய முடியும்.

• நோய் அறிகுறிகளைக் கவனமாக உணர்ந்து மருத்துவரிடம் செல்வதும், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உடல்நலப் பரிசோதனைகள் செய்துகொள்வதும் நல்லது. இது ஆரம்பநிலையிலேயே நோய்களைக் கண்டறிந்து மீள்வதற்கு உதவும், நீண்ட ஆயுளுக்கும் உத்தரவாதம் தரும்.

• மாதத்தில் ஏதேனும் ஒரு நாளையாவது கொண்டாட வேண்டும். புத்தாண்டு, பிறந்த நாள், திருமண நாள், அன்னையர் தினம், தந்தையர் தினம், குழந்தைகள் தினம் என்று முக்கியமான தருணங்களைக் குடும்பத்துடன் கொண்டாடுவதும், அந்த நாளில் மறக்க முடியாத பரிசுகளைப் பகிர்வதும் வாழ்வை மகிழ்வாக வைத்திருக்கும்.

• வாக்கிங் போவது, சுற்றுலா செல்வது, உறவுகள் அல்லது நண்பர்களின் குடும்ப நிகழ்வுகளுக்குச் செல்வது போன்ற தருணங்களில் பலரும் செல்போனில் புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள். அழகான நினைவுகளாக இவை சேமிக்கப்படுகின்றன. அடுத்தடுத்த நாட்களில் இதையெல்லாம் பார்ப்பதே மகிழ்ச்சியை அதிகரிக்கும்.


• வாழ்வில் பலரின் உதவிகளால்தான் நாம் மேலே உயர்ந்து வந்திருக்கிறோம். அப்படி உதவிகள் செய்தவர்களை நினைத்துப் பார்ப்பதும், அவர்களுக்கு நன்றிகள் சொல்வதும் நம்மைப் பக்குவப்படுத்தும். இளம் வயதில் உதவிகள் செய்த ஒரு நண்பன், பள்ளி நாட்களில் வழிகாட்டிய ஆசிரியர், உயர்கல்வி செல்லும்போது கைகொடுத்த உறவினர், முதன்முதலாக வேலைக்குச் சென்றபோது கற்றுத் தந்த அலுவலக சீனியர் என்று எவரையும் மறக்காமல் நன்றிகள் சொல்லுங்கள்.

• அறிமுகம் இல்லாத மனிதர்களைப் பார்த்தால்கூடப் புன்னகை செய்வதும், நற்செயல் செய்யும் எல்லோரையும் மனம்திறந்து பாராட்டுவதும் நம் ஒவ்வொரு நாளையும் இனிமையானதாக மாற்றும். நமக்கும் பாராட்டுகள் கிடைக்கும்.

• உறவினர்கள், நண்பர்களுடன் எப்போதும் தொடர்பில் இருங்கள். அவ்வப்போது அவர்களைச் சந்திப்பதும், பிறந்த நாள் மற்றும் திருமண நாள் போன்ற தருணங்களில் போனில் வாழ்த்துவதும் அவர்களை உங்களுக்கு நெருக்கமான இடத்தில் வைத்திருக்கும்.

• ஆண்டுக்குக் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது சுற்றுலா செல்லுங்கள். புதிய இடங்களுக்குச் செல்வது நமக்கு புதிய அனுபவங்களைக் கொடுக்கும். மனத்தை உற்சாகப்படுத்தும். •






ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் பலர் இதற்கு முன்பு, தான் வேலை பார்த்த நிறுவனத்தின் நல்ல விஷயங்கள் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். ‘அங்கே போனஸ் நிறைய கொடுப்பார்கள்’, ‘அங்கே கேன்டீனில் உணவு நன்றாக இருக்கும்’, ‘அங்கே என் மேனேஜர் தங்கமானவர்’ என்றெல்லாம் விவரித்து, “அதைவிட்டு இங்கே வந்து மாட்டிக்கொண்டேன்” என்று புலம்பிக்கொண்டே இருப்பார்கள்.

“சரி, அவ்வளவு நல்ல நிறுவனத்தை விட்டு ஏன் இங்கே வந்தீர்கள்?” என்று கேட்டால் பதில் சொல்லாமல் தடுமாறுவார்கள். அதிக சம்பளமோ, கூடுதல் சலுகைகளோ, பதவி உயர்வோ, ஏதோ ஒன்றுதான் அவர்களை மாற வைத்திருக்கும். ஆனால், புதிய வேலையில் கிடைத்த அந்த நல்ல விஷயங்களை நினைவில் வைக்காமல், கடந்த காலத்திலேயே வாழ்வார்கள்.

இது தவறு. வாழ்வில் உயர்வதற்குப் பெரிய தடைக்கல்லாக இந்தப் பண்பு இருக்கும். இதைத் துறந்துவிட்டு எந்த வேலையிலும் துணிச்சலாகச் சில விஷயங்களை ஆரம்பியுங்கள்...

- ஒரு நிறுவனத்தில் சில நடைமுறைகள் காலம் காலமாக மாறாமல் இருக்கும். இன்றைய சூழலில் அவை அவசியம் இல்லாதவை என்று உங்களுக்குத் தோன்றலாம். நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கே அவை தடையாக இருக்கலாம். அவற்றை மாற்றுவதற்குக் குரல் கொடுங்கள். இதற்காகச் சண்டை போடத் தேவையில்லை. அப்படிச் செய்தால் கலகக்காரர் என்ற பெயர் உங்களுக்கு வந்துவிடும். அவற்றை மாற்றினால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்று உறுதியான குரலில் தெளிவாக விவரியுங்கள். மாற்றம் நடக்கும்.

- மேலதிகாரிகள் சொல்வதைக் கண்ணை மூடிக்கொண்டு செய்து முடிக்கும் காலம் இப்போது மாறிவிட்டது. அவர்கள் தெளிவாக உத்தரவு தராவிட்டால், அவர்கள் சொல்வதைச் செய்யும்போது நிறுவனத்துக்குப் பாதிப்பு வரும் என்றால், அவர்கள் சொல்வது தவறாகத் தெரிந்தால், துணிச்சலாகக் கேள்விகள் கேளுங்கள். நிறுவனத்தின் நலனுக்காகக் கேள்விகள் கேட்பதில் தவறில்லை. தேவையான கேள்விகளைக் கேட்காவிட்டால், பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்காது.

- மாற்றங்களுக்குக் குரல் கொடுப்பது, கேள்விகள் கேட்பது என்று துணிச்சலைக் காட்டினாலும் பணிவாகவே இருங்கள். மேலதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர் வரை எல்லோரிடமும் மரியாதையுடன் நடந்துகொள்ளுங்கள். கோபமாகப் பேசும் மேலதிகாரிகளிடமும் கனிவாக நடப்பது உங்களுக்கு மதிப்பைப் பெற்றுத் தரும். அப்போதுதான் உங்கள் கேள்விகளுக்கு நிர்வாகம் காது கொடுக்கும்.

● வேலை செய்யும் இடத்தில் ஏதோ ஒரு விஷயம் சரியாக இல்லை என்று உங்களுக்குத் தோன்றலாம். மற்ற ஊழியர்களிடமும் கருத்துக் கேளுங்கள். எல்லோருக்குமே அப்படித் தோன்றினால், அதை எப்படி மாற்றலாம் என்று விவாதியுங்கள். அதன்பின் நிர்வாகத்துடன் பேசுங்கள். 'இது நிறைய பேரின் கருத்து' என்று கொண்டு போகும்போது அதற்குப் பெரிய மதிப்பு கிடைக்கும்.

● ஒரு நிறுவனத்தில் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக நீங்கள் பேசினால், மற்ற ஊழியர்களுக்கும் நீங்கள் முன்மாதிரியாக மாறுவீர்கள். 'இந்த ஆபீஸ் இப்படித்தான், இங்க எதுவுமே மாறாது' என்று புலம்புவதால் எந்தப் பலனும் இல்லை என்று உணர்வார்கள். அதை மாற்றத் துடிப்பார்கள். இப்படி நேர்மறையான சிந்தனை எங்கும் பரவும்போது, அது நிறுவனத்துக்கு நன்மை செய்யும். வளர்ச்சியை நோக்கி நிறுவனம் நகரும்.

● ஒரு வேலையை ஒரு குறிப்பிட்ட முறையில் செய்யச் சொல்கிறார்கள். ஆனால், அதைவிடச் சுலபமாக வேறொரு முறையில் செய்ய முடியும் என்று உங்களுக்குத் தோன்றுகிறது. 'இதை இப்படிச் செய்யலாமே' என்று கேளுங்கள். காலையில் நீண்ட நேரம் மீட்டிங்குகள் நடத்துவதால் உற்பத்தி குறைகிறது என்றால், மீட்டிங் நேரத்தை மாற்றவோ, குறைக்கவோ சொல்லுங்கள். பிரச்னைகளுக்கு மாற்றுத் தீர்வுகள் சொல்லும்போது நல்ல பலன் கிடைக்கும்.

● வேலைப்பளு அதிகமாக இருக்கும்போது கூடுதலாக ஒரு வேலையைச் செய்யச் சொன்னால், தயக்கமின்றி அதை மறுத்துவிடுங்கள். எதனால் அப்படி மறுக்கிறீர்கள் என்ற காரணத்தையும் சொல்லுங்கள். ஒரு வேலையை முழுமையாகச் செய்து முடிக்காமல் இன்னொரு வேலையை ஆரம்பிப்பது நிறுவனத்துக்குதான் பாதிப்பு ஏற்படுத்தும் என்பதைப் புரிய வையுங்கள். அந்த இன்னொரு வேலையை யார், எப்படிச் சீக்கிரம் முடிக்க முடியும் என்ற பரிந்துரையையும் கொடுத்துப் பாருங்கள்.

● வேலைகளைத் தலைமைப் பண்புடன் செய்யுங்கள். சக ஊழியர் ஒருவர் நிறைய வேலைகளை முடிக்காமல் வைத்துக்கொண்டு திணறுகிறாரா, அவருக்கு உதவி செய்யுங்கள். ஒரு வேலையை முடிப்பதற்காக, அலுவலக நேரத்தையும் தாண்டி உழைக்க வேண்டியுள்ளதா? தயக்கமின்றிக் கூடுதல் நேரம் உழைப்பைக் கொடுங்கள். புதிய வேலை ஒன்றை எப்படி ஆரம்பிப்பது என்று எல்லோரும் புரியாமல் தயங்குகிறார்களா? உங்களுக்கு அந்த வேலை தெரியும் என்றால் முதலில் போய் ஆரம்பியுங்கள். எந்தச் சூழலிலும் முதலில் கைதூக்கி வேலையைச் செய்பவராக இருங்கள்.

● போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில், மற்றவர்களுக்கு இணையாகவோ அல்லது அவர்களைவிடச் சிறப்பாகவோ பணிபுரிய ஏகப்பட்ட திறமை தேவைப்படும். அதை அவசியம் பெறுங்கள். சரியான இலக்குகள் வைத்துக்கொண்டு பணிபுரியுங்கள். மற்றவர்கள் எதிர்மறையாகப் பேசினாலும், கேலி செய்தாலும், அதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம். பெரிதாகக் கனவு காணுங்கள்.

● கிடைத்த வேலையில், பெறும் வருமானத்தில் எப்போதும் நிறைவடைந்துவிடாதீர்கள். புதுப்புது வாய்ப்புகளில் உங்களை ஈடுபடுத்திக்கொண்டு கடினமாக உழைக்கத் தயங்காதீர்கள். நீங்கள் இருக்கும் நிறுவனத்தில் சவாலான ஒரு வேலையைச் செய்ய வேண்டும் என்று நிர்வாகிகள் நினைக்கும்போதே உங்கள் முகம் ஞாபகத்துக்கு வர வேண்டும். அப்படிப்பட்ட மரியாதையைச் சம்பாதியுங்கள். ●

ராம்ராஜ் காட்டன்


# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 7

ஜனவரி 2024

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com


இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# ஆரம்பம் சுலபம்!

ஒரு வாகனத்தைச் சாவி போட்டு ஸ்டார்ட் செய்து பயணத்தை ஆரம்பிப்பது போல, வாழ்க்கைப்பயணத்தையும் புதிதாக ஆரம்பிப்பது அவ்வளவு சுலபமா? நீங்கள் மனம் வைத்தால் அது சுலபம்தான்!

எல்லோருக்கும் ஒருமுறைதான் வாழ்க்கை. அதை மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் அர்த்தமுள்ளதாகவும் வாழ வேண்டும். அதற்காக எந்தச் சூழலிலும் மாறத் தயாராக வேண்டும். எதிர்பாராத நெருக்கடிகள் எந்த நேரமும் வரலாம். புன்னகையுடன் அவற்றைக் கடக்கத் தெரிந்தால் போதும், உங்கள் வாழ்க்கை மாறும்.



# இரண்டு சிறுவர்கள்!

தேவாலயத்தில் வழிபாட்டுக்கு உதவி செய்யும் சிறுவர்களாக இருவர் வளர்ந்தார்கள். ஒரு சிறுவன், ஐரோப்பாவின் யூகோஸ்லாவியா என்ற நாட்டில் ஒரு தேவாலயத்தில் ஊழியம் செய்தான், இன்னொருவன் அமெரிக்காவில் ஊழியம் செய்தான்.

யூகோஸ்லாவியா சிறுவனை அவன் இருந்த தேவாலயத்தின் மதகுரு கடுமையாகத் திட்டிக்கொண்டே இருப்பார். அவன் என்ன செய்தாலும் குறை கண்டுபிடிப்பார். ஒருநாள் வழிபாட்டுக்காக மெழுகுவர்த்தியை ஏற்றி எடுத்து வரும்போது அவன் கீழே போட்டுவிட்டான். நெருப்பு தரைவிரிப்பில் பரவிப் பெரும் சேதாரம் ஆகிவிட்டது. மதகுரு உடனே அவன் கன்னத்தில் அறைந்து, “நீ ஒரு உதவாக்கரை. உடனே இங்கிருந்து வெளியே போ” என்று துரத்தி விட்டார்.

துரத்தப்பட்ட அந்தச் சிறுவன், வீதியோரம் குற்றவாளிகளுடன் வளர்ந்தான். இரக்கமற்றவனாகவும், கடவுள் நம்பிக்கை இல்லாதவனாகவும் வளர்ந்த அவன், பிற்காலத்தில் அந்த நாட்டை ஆட்சி செய்த சர்வாதிகாரியாக உயர்ந்து, பல லட்சம் மக்களை வதைத்தான்.

இதே சம்பவம் அமெரிக்காவிலும் நடந்தது. மெழுகுவர்த்தியைத் தவறவிட்ட சிறுவனைக் கனிவுடன் அரவணைத்த மதகுரு, “பயப்படாதே, இது எல்லோருக்கும் நடப்பதுதான். உன்னால் அடுத்த முறை சரியாகச் செய்ய முடியும்” என்று சொன்னார். பிற்காலத்தில் மக்கள் நேசிக்கும் மத வழிகாட்டியாக அந்தச் சிறுவன் வளர்ந்தான். கோபங்களையும் விமர்சனங்களையும்விட, கருணையும் ஆதரவும் நல்ல விளைவுகளைத் தரும். இவற்றையே பகிர ஆரம்பிப்போம்.



# யார் பிரச்னை?

வீட்டில் அப்பாவும் அம்மாவும் ஓயாமல் சண்டை போட்டுக்கொள்வதைப் பார்த்து ஓர் இளைஞன் கவலை அடைந்தான். கவலையை மறக்க மது குடிக்கப் பழகினான். குடிப்பழக்கத்துக்கு அடிமையானதால், அவனால் ஒழுங்காகப் படிக்க முடியவில்லை. எப்போதும் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் வாங்கிக்கொண்டிருந்த அவன், இப்போது ஃபெயில் ஆனான். பேராசிரியர்கள் திட்டினார்கள், நண்பர்கள் அவனிடமிருந்து விலகிப் போனார்கள். உடல்நலம் சீர்கெட்டது. இப்படித் தன்னைச் சுற்றியிருக்கும் எல்லாமே பிரச்னைகளாக அவனுக்குத் தெரிய, அவன் குடிப்பது இன்னும் அதிகமானது. தூக்கம் போனது, நிம்மதி போனது, நல்ல பெயரும் பறிபோனது.

கடுமையான வயிற்றுவலியுடன் மருத்துவரைப் பார்க்க ஒருநாள் காத்திருந்தபோது, அங்கு நோயாளிகளாக கடும் உபாதைகளுடன் வந்திருந்த மற்றவர்களைப் பார்த்துத் திடுக்கிட்டான். விபத்தில் கால்

## மாற வேண்டியது யார்?

எந்த ஒரு செயலிலும் புதிய தொடக்கத்தை நோக்கிப் போகும்போது ஒரு விஷயத்தை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். நமக்காக இந்த உலகம் ஒருபோதும் மாறிவிடாது. மாற்றம் நம்மிடம்தான் நிகழ வேண்டும். அதற்கு நம் சிந்தனையும் அணுகுமுறையும் மாற வேண்டும். எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும், அதிலிருக்கும் நல்ல விஷயங்களைப் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு தொழிலை ஆரம்பித்து, தன் முதலீடு எல்லாவற்றையும் இழந்து நெருக்கடியில் தவிக்கும் ஒருவர், 'எல்லாம் போய்விட்டது' என்று நினைத்தால் அவரால் மீண்டு வரவே முடியாது. 'எல்லாம் போனால் என்ன? கடன்கள் இல்லாமல் இருக்கிறேனே, அது போதும். என்னை நம்பி கடன் கொடுப்பவர்கள் உதவியுடன் வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்கலாம்' என்று நினைத்தால் அவர் மறுபடியும் அந்தத் தொழிலை மீட்க முடியும். வேலையை இழந்த ஒருவர் விரக்தியில் தவித்தால் அவருக்கு எதிர்காலமே கண்ணுக்குத் தெரியாது. 'என்னால் இதைவிட நல்ல வாய்ப்பைப் பெற முடியும்' என்று நினைத்தால் அவருக்கு வாய்ப்புகள் கைகூடும். எதையும் வேறு கோணத்தில் பார்க்கிறவர்கள், சுலபமாகப் புதிய ஆரம்பம் பெற முடியும்.



இழந்தவர், சிறுநீரகம் செயலிழந்து டயாலிசிஸ் செய்ய வந்தவர், பிறவிக் குறைபாட்டுடன் தவித்த குழந்தை என்று பலரும் அங்கு இருந்தார்கள். 'இவர்களின் பிரச்னைகளுடன் ஒப்பிடும்போது எனக்கு இருப்பதெல்லாம் ஒரு பிரச்னையா?' என்ற கேள்வி அவனுக்குள் எழுந்தது.

அப்போதுதான் அவனுக்கு ஒரு ஞானோதயம் பிறந்தது. 'என்னைச் சுற்றி ஏராளமான பிரச்னைகள் இருப்பதாக நினைக்கிறேனே! உண்மையில் அவைதான் பிரச்னையா, அல்லது நான்தான் பிரச்னையா?' என்று யோசித்தான். தன் குடிப்பழக்கமே நிஜமான பிரச்னை என்பது புரிந்தது.

அந்த நிமிடமே குடிப்பதை நிறுத்தினான். கல்லூரிக்கு ஒழுங்காகப் போனான், நல்ல மதிப்பெண் எடுக்க ஆரம்பித்தான். நண்பர்கள் மீண்டும் வந்தார்கள், பேராசிரியர்கள் பாராட்டினார்கள். வீட்டில் அவனால் நடந்த சண்டைகள் நின்றன. வாழ்வில் பின்னடைவுகள் ஏற்படும் சூழலில், 'நான்தான் பிரச்னையா' என்று கேட்டுக்கொண்டால் தீர்வுகள் கிடைக்கும்.





## வயது என்ன?

ஒரு ஞானியிடம் ஆசி பெறுவதற்காக ஒருவர் வந்தார். எப்படியும் 70 வயதுக்கு மேல் இருக்கும். ஆனால், முதுமையின் தள்ளாட்டம் இல்லாமல் உற்சாகமாக நடந்து வந்தார். "இந்தக் குழந்தையை ஆசிர்வதியுங்கள்" என்று ஞானியின் முன்பு அவர் பணிந்து நின்றார். ஞானி குழப்பமாகி, "குழந்தை என்கிறீர்கள்... உங்கள் வயது என்ன?" என்று கேட்டார். "நான்கு வயது" என்றார் முதியவர். "எப்படி?" என ஞானி மீண்டும் கேட்க, "என் தவறுகளைத் திருத்திக்கொண்டு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாக வாழ்க்கையை ஆரம்பித்தேன். அந்த மறுபிறவியையே என் வயதாகக் கருதுகிறேன்" என்றார் முதியவர்.

மதிப்புடன் மறுபிறவி எடுங்கள்!

# மீண்டும் புதிதாக ஆரம்பம்!



கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடும் குழந்தை, அலை வந்து அதைக் கரைத்தாலும் சோர்ந்து போகாமல் மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்கிறது. ஆனால், வளர்ந்த மனிதர்கள்தான் ஏதாவது விபரீதமாக நடந்தால் முடங்கிவிடுகிறார்கள். அப்படி ஆகாமல் புதிதாக மீண்டும் ஆரம்பிப்பது எப்படி?

• ஒரு தோல்வியிலிருந்து மீண்டு வந்து, அதே வேலை அல்லது தொழிலையே திருப்பிச் சரியாகச் செய்து வெற்றி பெறுவது ஒரு வகை மறுமலர்ச்சி வாழ்க்கை. அதில் உங்களுக்கு அனுபவம் உதவும். ஆனால், புதிய ஆரம்பம் என்பது அதுவல்ல! ஏதோ ஒரு விஷயத்தைச் செய்து, அதில் எல்லாவற்றையும் இழந்துவிட்டு, புதிதாக இன்னொன்றைப் பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கும் செயல் இது. உங்களை முற்றிலும் புதிய பிறவியாக உணரும்போதே இது சாத்தியமாகும்.

• இப்போது நீங்கள் என்ன சூழலில் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள். எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும், வாழ்க்கையை எப்படி மீண்டும் கட்டமைப்பது என்று திட்டமிடுங்கள்.

• ஒரு புதிய ஆரம்பம் வேண்டுமென்றால், உங்கள் குணங்களும் புதிதாக மாற வேண்டும். கோபம், விரக்தி, வெறுப்பு, பொறாமை போன்ற குணங்களைத் தூக்கி எறிந்துவிடுங்கள். ‘இதில் ஜெயித்து நாம் முன்னேறப் போகிறோம்’ என்ற நம்பிக்கையை மனத்தில் சுமந்துகொண்டு செயல்படுங்கள்.

• எதிர்மறையாகப் பேசும், உங்களைத் தோல்வியாளராகக் கருதும் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து விலகுங்கள். நம்பிக்கையுடன் பேசி உற்சாகப்படுத்தும் மனிதர்களிடம் மட்டுமே பேசுங்கள்.

• மற்றவர்கள் உங்களிடம் என்ன பேசுகிறார்கள் என்பது போலவே, நீங்கள் உங்களுக்குள் என்ன பேசிக்கொள்கிறீர்கள் என்பதும் முக்கியம். உங்களின் செயலும், அதில் எதிர்கால இலக்கும் மட்டுமே எப்போதும் உங்கள் கவனத்தில் இருக்க வேண்டும். அதை எப்படிச் சாதிப்பது என்று மட்டுமே உங்களுக்குள் பேசிக்கொள்ளுங்கள்.

• நீங்கள் எந்தத் துறையில் செயல்படுகிறீர்களோ, அதில் அனுபவம் வாய்ந்த ஒரு வழிகாட்டியின் துணை தேடுங்கள். சரியான திசையில் போகிறோமா என்பதை அவர் கண்டறிந்து நெறிப்படுத்துவார்.

• எதிர்காலத்தில் மட்டுமே நம் கவனம் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே, நம் கண்கள் முன்பக்கம் மட்டுமே பார்க்கின்றன. ஆனால், நம் மனம் அதை உணராமல் கடந்த காலத்துக்கே சென்று பழைய தவறுகளைக் கிளறுகிறது. உங்கள் கடந்த காலச் செயல்கள் எதுவும் உங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போவதில்லை. இப்போது என்ன செய்கிறீர்கள் என்பது மட்டுமே முக்கியம்.

• காலையிலிருந்து மாலை வரை ஒருவித தினசரி நடைமுறைகளுக்கு இத்தனை நாட்கள் பழகியிருப்பீர்கள். இனிமேல் அது மாறலாம். எப்படிப்பட்ட மாற்றங்களுக்கும் தயாராகுங்கள். ‘இப்படியெல்லாம் செய்ய வேண்டுமே’ என்று மனசுக்குள் சாதாரணமாக எதிர்ப்பு உணர்வு வருவதுகூடத் தவறு. அதை அனுமதிக்காதீர்கள்.

• நோயாளியை ஒரு டாக்டர் பரிசோதிப்பது போல, உங்களின் முன்னேற்றத்தை அவ்வப்போது சோதித்துப் பாருங்கள். சரியான பாதையில் போகிறோமா, எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம், எவ்வளவு கவனமாக இருக்கிறோம், மற்றவர்களிடம் எப்படிப் பழகுகிறோம் என்பதையெல்லாம் கவனியுங்கள். புதிய ஆரம்பம் நல்ல முடிவுக்கு உங்களைக் கூட்டிச் செல்லும். ●


RAMRAJ
Littlestars®
KIDS DHOTIS • SHIRTS
LET THE LITTLE ONES SHINE IN THE TRENDING TRADITION.


RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS • SHIRTS
DISCOVER THE
POWER
OF A PERFECT SHIRT FOR YOUR
STYLE STATEMENT
SCAN QR CODE
FOR STORE LOCATION
Available @ Ramraj Showrooms
& All leading textile shops
Shop online @ www.ramrajcotton.in


Steal the Spotlight with Style
Culture India™
TRADITIONAL KURTA DHOTI
RAMRAJ
SCAN QR CODE FOR STORE LOCATION
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in


SHIRT CRAFTED FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC, SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
LINEN PARK®
SHIRTS • TROUSERS • FABRICS
By
RAMRAJ©
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**
**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

ஒரு துறவியிடம் அவரின் பக்தர் ஒருவர் வந்து எப்போதும் புலம்பிக்கொண்டே இருப்பார். ஒவ்வொரு முறையும் புதிது புதிதாகப் பிரச்னைகளைச் சொல்வார். துறவி பொறுமையாகத் தீர்வுகளைச் சொல்லி அனுப்புவார். அடுத்த மாதமே இன்னொரு பிரச்னை பட்டியலோடு பக்தர் வருவார். 'ஒரு மனிதனால் இவ்வளவு பிரச்னைகளைத் தன் வாழ்க்கையில் உருவாக்கிக்கொள்ள முடியுமா' என்று துறவிக்கு வியப்பாக இருக்கும். பக்தர் பிரச்னைகளை விவரிக்கும்போது எரிச்சலும் ஏற்படும்.

ஒருமுறை பக்தர் வந்தபோது துறவி அமைதியாக அவரை அருகில் அழைத்தார். ஒரு டம்ளர் தண்ணீரை எடுக்கச் சொன்னார். அதில் ஒரு கைப்பிடி உப்பைப் போட்டு, அந்தத் தண்ணீரைக் குடிக்கச் சொன்னார். ஒரு மிடறு குடித்ததுமே, "ஐயோ, துவர்ப்பு" என்று முகம் சுளித்தார் பக்தர். அவரை அமைதியாகக் கூட்டிக்கொண்டு அருகில் இருந்த குளத்துக்குப் போனார் துறவி. குளத்து நீரில் ஒரு கைப்பிடி உப்பு போட்டார். அந்த நீரை எடுத்துக் குடிக்கச் சொன்னார். "எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். "உப்பு கரிக்கவில்லை" என்றார் பக்தர்.

''வாழ்க்கையில் பிரச்னை என்பது இந்த உப்பு போன்றது. அது அதிகமாகவும் ஆவதில்லை, குறைவதும் இல்லை. பிரச்னைகளை அணுகும்போது நம் மனத்தை ஒரு டம்ளர் போல வைத்திருந்தால் வலி அதிகமாகும். குளம் போல விசாலமாக ஆக்கினால் வலி குறையும். டம்ளராக இருப்பதை நிறுத்து, குளமாக மாறிவிடு" என்று துறவி சொன்னதும், புரிந்துகொண்டு கிளம்பினார் பக்தர். அதன்பின் அவர் பிரச்னைகளுடன் வருவதே இல்லை.

பிரச்னைகளில் மூழ்கி எழுந்து புதிதாக வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிக்கும்போது பலவிதமான மனக்குழப்பங்கள் வருவது இயல்பு. அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு வாழ்வில் வெற்றிகரமாக மீண்டு வருவதற்குச் சில விஷயங்கள் முக்கியம். அவை:

● 'இதுதான் கடைசி வாய்ப்பு' என்று புதிதாக ஒன்றை ஆரம்பித்தாலும், நம்பிக்கையை இழக்காதீர்கள். மகிழ்ச்சியுடன் அதை செய்யத் தொடங்குங்கள். மகிழ்ச்சியான மனிதர்களால் எதையும் சாதிக்க முடியும்.

● நிறைய இழந்திருந்தாலும், அந்தச் சூழலிலும் உங்களிடம் மிஞ்சியிருக்கும் விஷயங்களை நினைத்துப் பெருமை கொள்ளுங்கள். அதற்காக இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள். உங்களிடம் இருக்கும் திறமைகளை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள்.

● எல்லா மனிதர்களையும் மதிப்புடன் நடத்துங்கள். எவரையும் அவரின் சூழலோ, பின்னணியோ தெரியாமல் காயப்படுத்திவிடாதீர்கள். மனிதர்களை நேசித்து எந்தச் செயலையும் செய்தால், அதில் மிகுந்த மனநிறைவு கிடைக்கும்.

● ஒவ்வொரு மனிதரிடமும் ஏதோ ஒரு திறமை இருக்கும். நமக்குத் தேவைப்படும் இடத்தில் அதைக் கண்டறிந்து பயன்படுத்துவதே சிறப்பு. ஒவ்வொருவரின் பலத்தையும் கண்டறியுங்கள். ஆனால், எவரையும் உங்கள் மனத்தில் இருக்கும் தராசில் எடை போட்டுத் தவறாக நடத்திவிடாதீர்கள்.

● 100 வயதில்கூடக் கற்றுக்கொள்பவர்கள் உண்டு. எல்லாமே வேகமாக மாறிவரும் உலகில், உங்கள் வேலை, தொழில் அல்லது வியாபாரம் சார்ந்து புதுப்புது விஷயங்களைக் கற்றுக்கொள்ளுங்கள்.

● மற்றவர்கள் பேசுவதைக் கவனித்துக் கேளுங்கள். நீங்கள் செய்யும் செயலுக்கு அவை ஏதோ ஒருவகையில்





உதவலாம். வழிகாட்டிகள் முதல் வாடிக்கையாளர்கள் வரை எல்லோரின் கருத்தையும் கவனியுங்கள்.

● நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும், அதற்கு நியாயமான காரணம் இருக்கவேண்டும். அதேபோல 'இதைச் செய்தால் இந்த விளைவு ஏற்படும்' என்று உணர்ந்திருக்கவும் வேண்டும். நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களையே செய்ய வேண்டும்.

● மற்றவர்கள் பேசும் உற்சாக வார்த்தைகள் உங்களை ஊக்கப்படுத்தும். அப்படிப்பட்ட மனிதர்கள் உங்களைச் சுற்றி இருக்கட்டும். அதேபோல அடுத்தவர்களின் சாதனைகளையும் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள். கொடுப்பதே கிடைக்கும்.

● எவ்வளவு நெருக்கடியான வேலைகளுக்கு மத்தியிலும், மோசமான சூழல்களிலும் புன்னகை செய்ய மறக்காதீர்கள். சிக்கல்களைச் சிரித்தபடிக் கடக்கத் தெரிந்த மனிதர்களால், எப்படிப்பட்ட நிலையிலும் சாதிக்க முடியும்.

● பணிவு, துணிவு, நேர்மை – இந்த மூன்றும்தான் ஒருவரை உயர்த்தும் ஏணிகள். எந்த நிலையிலும் இந்தக் குணங்களைக் கைவிடாதீர்கள். 'இவர் ஒரு விஷயத்தைச் சொன்னால், அது சரியாகத்தான் இருக்கும்' என்ற நம்பிக்கையைப் பெறுங்கள்.

● பெரும்பான்மை மனிதர்கள் போல இல்லாமல் வித்தியாசமான செயல்களைச் செய்பவர்கள் ஜெயிக்கிறார்கள். மற்றவர்கள் செய்யும் செயலையேகூட வித்தியாசமாகச் செய்பவர்களும் வெல்கிறார்கள். எதைச் செய்தாலும் வித்தியாசம் காட்டுங்கள்.

● கடுமையாக உழைத்தாலும், இடையிடையே போதுமான ஓய்வெடுங்கள். ஓய்வு நேரத்தை மனத்துக்கு வளம் தரும் செயல்களில் செலவிடுங்கள். குடும்பத்துடன் பொழுது போக்குங்கள். ஆனால், நேரத்தை வீணடிக்க வேண்டாம். தேவையற்ற விவாதங்களும் வேண்டாம்.

● 'இது நடக்காமல் போய்விடுமோ', 'இங்கு நாம் கேட்ட பணம் கிடைக்காதோ' என்றெல்லாம் எதிர்மறையாக எப்போதும் யோசிக்காதீர்கள். உங்களுக்கு முதலில் நம்பிக்கை இருந்தால்தான், எல்லாம் நல்லபடியாக நடக்கும்.

● மற்றவர்கள் தப்பாக நினைத்துக்கொள்வார்களோ என்பதற்காக எதையும் செய்யாதீர்கள். மற்றவர்களிடம் பாராட்டு வாங்க வேண்டும் என்பதற்காகவும் எதையும் செய்யாதீர்கள். எது சரியான செயலோ, அதை நேர்த்தியாகச் செய்யுங்கள்.

● மற்றவர்கள் நம்பாமல் போனாலும், நீங்கள் உங்களை நம்புங்கள். உங்கள் கனவுகளை நனவாக்கும் நடைமுறைக்குத் தடையாக இருப்பது உங்கள் சந்தேகம் மட்டுமே! அதைத் துடைத்து எடுத்துத் தூரப் போட்டுவிடுங்கள்.

● உங்கள் வாழ்க்கையை மாற்றும் முழுப்பொறுப்பும் உங்களுடையதுதான். நீங்கள் மாறினால்தான் அது மாறும். எந்தத் தவறுக்கும் அடுத்தவர்கள் மீது பழியைப் போடாதீர்கள்.

● புதிதாக ஒரு விஷயத்தை ஆரம்பித்துச் செய்வது என்பது மலையேற்றம் போன்றது. வழி கடினமாக இருக்கும், சில இடங்களில் உயரத்தில் ஏறுவீர்கள், சில இடங்களில் பள்ளத்தில் இறங்குவீர்கள். ஆனால், அடைய வேண்டிய சிகரம் கண்ணிலிருந்து மறையக்கூடாது. அதுபோல, இலக்கை மறக்காதீர்கள்.

● ஜெயிக்க வேண்டும் என்ற தாகம் எப்போதும் உங்கள் மனத்தில் இருக்க வேண்டும். ஒரு குழந்தை சாப்பிட மறுத்து, அடம்பிடித்து ஓடிக்கொண்டே இருந்தாலும், துரத்திக்கொண்டு செல்வார் அம்மா. குழந்தையின் கவனத்தைத் திசை திருப்பியாவது உணவை ஊட்டி விடுவார். அந்த அம்மா போல நீங்கள் செயல்பட வேண்டும்.

● புதிதாக ஆரம்பித்த இந்தச் செயலில் நீங்கள் அடையப்போகும் வெற்றியைக் கற்பனை செய்யுங்கள். கற்பனையில் காணும் காட்சி விரைவில் நிஜமாகும். ●



# மறுபிறவி எடுங்கள்!

தன் சாம்பலில் இருந்து மீண்டும் உயிர்த்தெழும் என்று பீனிக்ஸ் பறவையை வர்ணிப்பார்கள். கற்பனையான பறவை என்றாலும், இழப்புகளிலிருந்து மீண்டெழும் அத்தனை பேருக்கும் நம்பிக்கை தரும் முன்னுதாரணம்தான் பீனிக்ஸ் பறவை. ஓசை எழுப்பப்பட்டதும் சீறிப் பாயும் ஓட்டப்பந்தய வீரர்கள் போல, புதிய ஆரம்பத்தில் முன்னேறிச் செல்ல சில வழிகள்:

● மற்றவர்களைவிட உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டும் என நினைக்காதீர்கள். உங்களின் முந்தைய நிலையைவிடச் சிறந்த நிலையை அடைய வேண்டும் என்று எண்ணுங்கள். வாழ்க்கை சிறக்கும்.

● கோபத்திலோ, விரக்தியிலோ அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள். நன்கு யோசித்து ஒரு முடிவை எடுங்கள். அதிலிருந்து பின்வாங்காதீர்கள்.

● நீங்கள் செய்த செயல்களைவிட, செய்யாமல் விட்ட விஷயங்களை நினைத்தே பிற்காலத்தில் வருத்தப்படுவீர்கள். எனவே, நல்ல வாய்ப்புகளை எப்போதும் தவறவிடாதீர்கள்.

● 'இதுதான் என் வாழ்க்கை' என்று தீர்மானித்துவிட்ட ஒன்றிலிருந்து பின்வாங்காதீர்கள். வேலை, தொழில், வியாபாரம் என்று எதுவாக இருந்தாலும், அது உங்கள் உணர்வில் கலந்துவிட வேண்டும்.

● கடந்த காலத் தவறுகளிலிருந்து 'எதைச் சரியாகச் செய்ய வேண்டும்' என்று பாடம் கற்றுக்கொள்ளுங்கள். மற்றபடி, அதையே நினைத்து வருத்தப்படாதீர்கள். எதிர்காலத்தைச் சிறப்பாக உருவாக்குவது மட்டுமே இலக்காக இருக்கட்டும்.

● மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கவனிக்காதீர்கள். உங்களின் சரி, தவறுகளை அலசிப் பார்த்து முடிவெடுக்கத் தகுதியான சிறந்த நீதிபதி நீங்கள்தான். எதைச் செய்தோம், எதைச் செய்திருக்கலாம் என்று நேர்மையாக அலசிப் பாருங்கள்.

● எல்லோருக்காகவும் அக்கறை காட்டினாலும், உங்கள் நலனையும் கவனியுங்கள். கொஞ்சம் சுயநலமாக இருக்கலாம், தப்பில்லை. புதிய ஆரம்பம் சிறப்பாக அமைய, உங்கள் உடல்நலனும் மனநலனும் ஆரோக்கியமாக இருப்பது அவசியம்.

● 'நான் தோற்றுப் போனவன் என்பதால்தான் யாருக்கும் என்னைப் பிடிக்கவில்லை' என்பது போலச் சுய இரக்கம் கொள்ளாதீர்கள். கடவுளையே வெறுப்பவர்கள் இந்த உலகத்தில் உண்டு. உங்களை நீங்கள் முதலில் நேசித்தால், மற்றவர்களும் நேசிக்க ஆரம்பிப்பார்கள்.

● அபத்தமாகப் பேசும் மனிதர்களுடன் வாக்குவாதம் செய்து மன அமைதியை இழக்காதீர்கள். அவர்கள் கருத்தை அவர்கள் வைத்துக்கொள்ளட்டும். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக இருங்கள்.

● உங்களிடம் ஆதாயம் பெற நினைப்பவர்கள், உங்களை நேசிப்பவர்கள் பலரும் பொய்யாகச் சில புகழுரைகளைப் பேசலாம். அதையெல்லாம் உண்மை என நம்பிவிடாதீர்கள். நேர்மையாக விமர்சனம் செய்யும் நண்பர்களின் கருத்தைக் கேளுங்கள்.

● செய்யும் செயலில் நமக்குத் திறமை இல்லை என்று உணர்ந்தாலும் பரவாயில்லை. அதைத் தொடர்ச்சியாகச் செய்யுங்கள். திறமையாகச் செய்பவர்கள் போலவே, தொடர்ச்சியாகச் செய்பவர்களும் ஜெயிக்க முடியும்.

● பிரச்னைகள், பின்னடைவுகள் எது ஏற்பட்டாலும் சோகத்தில் மூழ்கிவிடாதீர்கள். அதிலிருந்து மீளும் வழி தேடுங்கள். அதுதான் உங்களைப் பெருமைக்குரியவராக மாற்றும்.

● எந்தச் சூழலிலும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வரும் வாய்ப்புகளைத் தவறவிடாதீர்கள். உங்களுக்கும் இதுபோலக் கண்ணுக்குத் தெரியாத உதவிகள் வந்து கைதூக்கிவிடும். ●

இயற்கைத் தெய்வமான சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் பண்டிகையே பொங்கல் திருநாள். இது உழவர் சமூகத்தின் வளமைத் திருவிழா. விளைச்சலை அறுவடை செய்யும் பருவமே தை மாதம். அந்த அறுவடையில் கிடைத்த புத்தரிசியை வெல்லம், பால், நெய் சேர்த்துப் புதுப் பானையில் இட்டு, புதிய அடுப்பில் பொங்கி, இயற்கைக்கும் சூரியனுக்கும் மாடுகளுக்கும் படைத்து நன்றி செலுத்துவதே பொங்கல் விழாவாகும்.

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்ற நம்பிக்கையே நம்மை வழிநடத்துகிறது. ‘தை மாதம் ஒரு நல்ல செயலை ஆரம்பித்தால், அது நல்ல பயனை நமக்கு அளிக்கும்’ என்ற நம்பிக்கையுடன் திருமணங்கள், புது வீடு கட்டுதல் எனச் சுப நிகழ்வுகளைத் தை மாதத்தில் செய்கிறோம்.

நீர் வளம் இருக்கும் இடங்களில் மூன்று போகம் வேளாண்மை நடக்கும். வானம் பார்த்த பூமியில் மழை பெய்யும்போது ஒரு வேளாண்மைதான் விளைவிக்க முடியும். எனவே, மார்கழி அல்லது தை மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். அதையே பொதுவான அறுவடைத் திருவிழாவாகத் தமிழர்கள் கொண்டாடுகின்றனர்.

அறுவடை முடிந்து பெற்ற புத்தரிசி, கரும்பு, மஞ்சள், பனங்கிழங்கு, அவரை, புடலை போன்ற காய்கறிகள், சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்றவையே படையலாக வைக்கப்படும்.

பொங்கல் திருநாளில், வாசலில் பொங்கல் வைத்து சூரியனுக்குப் படைப்பது மரபாக உள்ளது. பானையின் கழுத்தில் மஞ்சள் கொத்து கட்டி, விபூதி பூசி, சந்தனம் குங்குமம் ஆகியவற்றால் பொட்டிட்டு அலங்கரிப்பார்கள். பொங்கல் பொங்கும்போது ‘பொங்கலோ பொங்கல்’ என்று சூரியனை வணங்கி நன்றி தெரிவிப்பார்கள்.

வளம், செழிப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் ஆகிய எல்லா நலன்களும் எல்லோரின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பொங்கவேண்டும் என்ற பரந்த சிந்தனையின் வடிவமே பொங்கல் திருநாள்.

பொங்கல் திருவிழாவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் வழிபாடாகக் கருதலாம். தற்போதுவரை கிராமங்களில் மண்பானையிலேயே பொங்கலிடுகின்றனர். இந்தப் பானை முதலில் பூமியிலிருந்து களிமண்ணால் செய்யப்படுகிறது. பானையில் நீர்விட்டு, புது அடுப்பில் நெருப்பு வைத்து அரிசியைக் கொதிக்க வைக்கிறோம். நெருப்பு எரிவதற்குக் காரணமாகக் காற்று இருக்கிறது. வெட்டவெளியில் பொங்கல் வைப்பதன் மூலம் ஆகாயத்தைப் பார்க்கிறோம். இப்படிப் பஞ்சபூதங்களை வழிபடும் பண்டிகையாகப் பொங்கல் அமைந்துள்ளது.

பொங்கல் கொண்டாட்டத்தின் முக்கியமான அடையாளம், கரும்பு. இந்தக் கரும்பும் ஒரு வாழ்க்கைத் தத்துவம் சொல்கிறது. கரும்பு அடி முதல் நுனி வரை ஒரே மாதிரி இருக்காது. நுனிக்கரும்பு உப்புச்சுவையுடனும் அடிக்கரும்பு அதிக இனிப்புடனும் இருக்கும். நுனிக் கரும்பு போல் வியர்வை சிந்தும் அளவுக்கு வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாய் இருந்தாலும், அதன் முடிவில் அடிக்கரும்பு இனிப்பு போல் வாழ்க்கை இனிக்கும். கரும்பின் மேற்பரப்பு கடிக்கக் கடினமாக இருந்தாலும், உள்ளே இனிப்பான சாறு இருக்கிறது. கடுமையான சோதனைகளைக் கடந்து சென்றால்தான் இனிமையான வாழ்வைச் சுவைக்க முடியும் என்பதே இதன் தத்துவம்.

# பொங்கலோ பொங்கல்!







# கர்ப்பகிருபா நிகழ்ச்சியில் ராம்ராஜ்!

வெற்றி நலவாழ்வு மையத்தின் சார்பில் 'கர்ப்ப கிருபா – லிட்டில் ஸ்டார்ஸ்' நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் செயல்பாடுகளில் ராம்ராஜ் காட்டன் அக்கறையுடன் பங்கெடுத்து வருகிறது. வனம் இந்தியா பவுண்டேஷன் செயலாளர் திரு. ஸ்கை.வே.சுந்தரராஜ் அவர்கள் தவம் இயற்றி, வரவேற்புரை வழங்கினார். மருத்துவர் ஆண்டாள் பாஸ்கர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, சிறப்பான குழந்தை வளர்ப்பு குறித்து விளக்கினார். நடிகர் திரு. இமான் அண்ணாச்சி அவர்களின் 'சுட்டீஸ் கொண்டாட்டம்' நிகழ்ச்சியும், இந்தியாவின் சார்லி சாப்ளின் திரு. யோநா அவர்களின் மேஜிக் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R.நாகராஜன் அவர்கள் தலைமையுரையாற்றினார். வெற்றி நலவாழ்வு மையத்தின் கர்ப்ப கிருபா செயல்பாடுகள் குறித்து அவர் விளக்கினார். "கர்ப்பிணிப் பெண்களுக்கு பயிற்சி தரவே கர்ப்பகிருபா ஆரம்பிக்கப்பட்டது. கடந்த ஒன்பது வருடங்களில் 1,000–க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு அறிவியல் மற்றும் ஆன்மிகம் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி பெற்ற கர்ப்பிணிகளுக்குப் பிறந்த குழந்தைகள், 'கருவிலே திருவுடையார்' என்ற பெருமைகளைப் பெற்றுள்ளன.

கருவுற்றிருக்கும் காலத்தில் தைராய்டு கட்டுப்படுத்துவதற்குப் பயிற்சிகள், குழந்தையின் மூளை வளர்ச்சிக்கான பயிற்சிகள், கருச்சிதைவு மற்றும் குறைப்பிரசவத்தைத் தவிர்ப்பதற்குப் பயிற்சிகள் ஆகியவை தரப்படுகின்றன. இதனால் தாய்மார்களின் உடல்நலம் காக்கப்படுகிறது. கர்ப்பகிருபா பயிற்சி பெற்றவர்களில் 75% தாய்மார்களுக்கு சுகப்பிரசவம் நடந்துள்ளது.

சாதாரணமாக குழந்தைகள் பிறந்து 3 மாதங்களுக்குப் பின்னர்தான் முகம் பார்த்துச் சிரிக்கும். ஆனால், கர்ப்பகிருபா பயிற்சிகளின் மூலம் பிறந்த குழந்தைகள் ஒரே வாரத்தில் முகம் பார்த்துச் சிரிக்கும். பிரசவ காலத்தில் ஏற்படும் வலி குறையவும், பிரசவத்தைப் பக்குவத்துடன் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவத்தையும் இப்பயிற்சிகள் அளிக்கின்றன. பிரசவத்திற்குப் பின் பொதுவாக தாய்மார்களுக்கு ஏற்படும் மன உளைச்சல் ஏற்படாமலும் இப்பயிற்சிகள் தடுக்கின்றன. குழந்தைகளுக்கு 2 வயது வரை தாய்ப்பால் கொடுக்கும் ஆரோக்கியமான உடலையும், மனதையும் இப்பயிற்சிகள் வழங்குகின்றன" என்று திரு. நாகராஜன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் குழந்தைகளுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தி, சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.





# திருமுறை திருவிழாவில் ராம்ராஜ்!

இம்பா சமூக அமைப்பு மற்றும் ஐபிஎன் வணிக நிறுவனம் சார்பில் பன்னிரு திருமுறை திருவிழா மற்றும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண நிகழ்வு சென்னையில் நடைபெற்றது. மதுரையில் மீனாட்சி திருக்கல்யாணம் எப்படி நடைபெறுமோ, அதேமுறையில் எவ்வித மாற்றமுமின்றி வரலாற்றில் முதல்முறையாக மதுரைக்கு வெளியே நடைபெற்ற திருக்கல்யாண உற்சவம் இது. தமிழக மக்களின் நன்மைக்காகவும், நல்வாழ்வுக்காகவும் நடைபெற்ற இந்த நிகழ்வில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R.நாகராஜன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

இந்நிகழ்வில் திருவாடுதுறை, தருமபுரம், பேரூர், சிரவை, மதுரை, குன்றக்குடி, செங்கோல், வேளாக்குறிச்சி, துழாவூர் மற்றும் மயிலம் சைவ ஆதீனங்கள் எழுந்தருளி ஆசி வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு பி.கே.சேகர்பாபு, பாஜக தமிழகத் தலைவர் திரு. அண்ணாமலை, மூத்த தலைவர் திரு. ஹெச்.ராஜா, புதிய நீதிக்கட்சி தலைவர் திரு. ஏ.சி.சண்முகம், இம்பா நிறுவனர் திரு. ஆர்.அருணாச்சல முதலியார், பொருளாளர் திரு. அப்பு ஆர்.சந்திரசேகர் ஆகியோர் பங்கேற்றனர்.

காலை 8 மணிக்குத் தொடங்கிய நிகழ்ச்சியில், 108 சைவ ஓதுவா மூர்த்திகளின் திருமுறை இசை, 108 திருமுறை பேழை வழிபாடும் நடைபெற்று, அதன்பிறகு மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

ஐன்ஸ்டீனுக்குள் அறிவியல் கேள்விகள், சிறுவனாக இருக்கும்போதே உருவாகிவிட்டன. லியனார்டோ டாவின்சி சிறுவயதில் தனக்குள் தோன்றிய கற்பனைகளையே அற்புதமான ஓவியங்களாக உருவாக்கினார். அவை பிற்காலத்தில் பல அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாகின. மொஸார்ட்டுக்குள் இருந்த இசை மேதையும் சிறுவயதிலேயே வெளிப்பட்டான். விதவிதமான எழுத்து வடிவங்களைச் சிறுவனாக இருந்தபோதே உருவாக்கினார் ஸ்டீவ் ஜாப்ஸ். இன்று கம்ப்யூட்டரில் உலகமே பயன்படுத்தும் பல எழுத்து வடிவங்களுக்கு அந்தக் கற்பனையே காரணம்.

இப்படி நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். தங்களுக்கு எதில் ஆர்வமும் திறமையும் இருக்கிறது, எந்தத் துறையில் தங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் என்பதையெல்லாம் பலரும் குழந்தைப் பருவத்திலேயே கண்டுபிடித்து விடுகிறார்கள். வளர்ந்த பிறகு அதை அறியும் சிலரும்கூட, தங்களின் குழந்தை மனத்தின் மூலமே அதைக் கண்டடைகிறார்கள்.

உங்களுக்குள் இருக்கும் குழந்தையைப் பின்தொடர்ந்தால், உங்களுக்காகக் காத்திருக்கும் வாழ்க்கைப் புதையலை அடையலாம். அதைக் குழந்தை மனசுடன் செய்ய வேண்டும். குழந்தைகள் செய்யும் பல விஷயங்களைப் பெரியவர்கள் செய்ய முடியாது. குழந்தைகள் ஒரு நாளைக்குச் சுமார் 300 தடவை சிரிக்கிறார்கள் என்று அறிவியல் சொல்கிறது. பெரியவர்கள் 30 முறை சிரித்தால் பெரிய விஷயம். காரணம், குடும்பப் பொறுப்புகளும் பணிசார்ந்த பொறுப்புகளும் கொடுக்கும் அழுத்தம். கவலை, பயம், எரிச்சல், பதற்றம் என்று உணர்வுகள் ஏற்படுத்தும் அழுத்தம் காரணமாகவே, அவர்களால் வித்தியாசமாகச் சிந்திக்க முடியவில்லை.

ஆனால், வளர்ந்தவர்களிடம் சில நல்ல விஷயங்களும் இருக்கின்றன. குழந்தைப் பருவத்தில் இல்லாத அனுபவமும் அறிவும் சிந்தனையும் இப்போது வாய்த்திருக்கும். ஒரு செயலைச் செய்வதில் இருக்கும் சாதக பாதகங்களை அலசிப் பார்க்க முடியும். குழந்தையின் ஆர்வத்துடனும், வளர்ந்தவர்களின் அனுபவ முதிர்ச்சியுடனும் ஒரு செயலை ஆரம்பித்தால் அதில் ஜெயிப்பது எளிது. அதற்குச் சில வழிகள்:

- கேள்விகள் கேளுங்கள். குழந்தைகள் ஆர்வத்துடன் கேட்பார்கள், பெரியவர்கள் கேட்பதில்லை. “திருப்பூர்ல பிறந்தேன், சென்னை வந்து 15 வருஷமாகுது” என்று ஒருவர் சொன்னால், ‘‘அப்படியா?’’ என்பதோடு முடித்துக்கொள்வார்கள் பெரியவர்கள். குழந்தைகளோ, ‘‘ஏன் சென்னை வந்தீங்க?’’ என்று கேள்வியை





# குழந்தை போல ஆரம்பிக்கலாம்!

## வாசகர் கடிதங்கள்

‘வெண்மை’ டிசம்பர் மாத ஆர்வம் சிறப்பிதழை ஆர்வத்துடன் படித்தேன். ‘ஆர்வத்தை உணர்வது எப்படி?’, ‘ஆர்வம் வேறு… திறமை வேறு!’, ‘ஆர்வத்தால் கிடைக்கும் அறிவு’ என ஒவ்வொரு கட்டுரையும் அருமை. குறிப்பாக ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் கடிதத்தில், ‘ஆர்வம் என்பது அற்புதமான மந்திரச்சாவி. அது எத்தகைய இறுக்கமான கதவையும் எளிதில் திறக்க உதவும்’ என்பதை அழகாக எடுத்துக் கூறியிருந்தார்.

*– M.சம்பத்குமார், திண்டல், ஈரோடு.*

‘ஆர்வம்’ சிறப்பிதழ் அருமை. ‘ஒவ்வொருவருக்கும் ஒன்றில் திறமை இருக்கும். ஆர்வம் இருக்கும். அவர்களின் ஆர்வத்தைக் கண்டறிந்து அதில் அவர்களை ஈடுபட வைக்க வேண்டும்’ என்பதை உணர்த்திய அற்புதமான தொகுப்பு.

*– ந.சண்முகம், திருவண்ணாமலை.*

கிரிக்கெட் வீரர் தோனியில் ஆரம்பித்து, செடி வளர்ப்பது வரை பல உதாரணங்களைக் கூறி ஆர்வத்தை வளர்க்க வழிகாட்டிய வெண்மை டிசம்பர் இதழ் பாராட்டுக்குரியது.

*– T.செல்வி, நாகப்பட்டினம்.*

ஆரம்பிப்பார்கள். குழந்தைகளின் கற்றலுக்கும் கற்பனைக்கும் கேள்விகளே ஆதாரம். ‘ஒரு தீவில் இருக்கும் உயிரினங்கள் போல இன்னொரு தீவில் ஏன் இல்லை’ என்ற கேள்வியே சார்லஸ் டார்வின் உருவாக்கிய பரிணாமக் கொள்கைக்கு ஆதாரம். ‘யுரேனியம் ஏன் ஒளிர்கிறது’ என்ற கேள்வியிலிருந்தே மேரி க்யூரி கதிர்வீச்சைக் கண்டறிந்தார். கேள்விகளே பாதைகளைத் திறக்கும், வாய்ப்புகளை உருவாக்கும்.

● ஆர்வத்தை எப்போதும் இழக்காதீர்கள். பட்டத்தைப் பறக்கவிட்டு அதன் செயல்பாடுகளைக் கவனித்த பெஞ்சமின் ஃபிராங்க்ளின், அதன் மூலமே மின்சாரத்தைக் கண்டுபிடித்தார். உயரத்திலிருந்து கீழே போட்ட ஒரு உலோக உருண்டையும், ஒரு பறவை இறகும் எவ்வளவு நேர இடைவெளியில் பூமியை அடைகின்றன என்று ஆர்வத்துடன் பார்த்த கலிலியோ, புவி ஈர்ப்பு விசையைக் கண்டறிந்தார். ஆர்வமே எப்போதும் புதுமையான திசைகளில் வாய்ப்புகளைத் தேடித் தரும்.

● எந்தச் சூழலிலும் கனவையும் நம்பிக்கையையும் இழக்காதீர்கள். ‘இதெல்லாம் சாத்தியமா’ என்ற சின்னச் சந்தேகம்கூட உங்கள் நம்பிக்கையைக் குறைத்துவிடும். மின்சாரம், ரேடியோ, எக்ஸ்ரே கருவி, ரயில் எஞ்சின் என்று அதுவரை உலகத்தில் இல்லாத கருவிகளை முதல்முதலாகக் கண்டுபிடித்தவர்கள், ‘இதெல்லாம் நடக்குமா’ என்று நினைத்திருந்தால் எதுவுமே வந்திருக்காது. தங்கள் கனவை அவர்கள் நம்பினார்கள். உங்கள் கனவை நீங்கள் நம்புங்கள்.

● தயக்கம் தவிர்த்துவிடுங்கள். ஒரு குழந்தையிடம் பேப்பரும் கலர் பென்சில்களும் கொடுத்துப் படம் வரையச் சொன்னால், ஆர்வத்துடன் வரைய ஆரம்பித்துவிடும். தனக்கு ஓவியம் வரையத் தெரியுமா, தான் அதற்கான பயிற்சி பெற்றிருக்கிறோமா, நாம் வரைவது நன்றாக வருமா, யாராவது கிண்டல் செய்வார்களா என்றெல்லாம் குழந்தை யோசிப்பதில்லை. ஆனால், பெரியவர்களுக்கு ஏராளமான தயக்கம் இருக்கிறது. தனக்கு நன்றாகத் தெரிந்த ஒரு வேலையைக்கூட அரைமனசுடன் செய்கிறார்கள். அதுதான் வெற்றியின் குறுக்கே நிற்கிறது.

● எல்லாவற்றிலும் எதிர்பார்ப்பு வைக்காதீர்கள். குழந்தைகள் விளையாடும்போதோ, ஏதோ ஒன்றைச் செய்யும்போதோ, இதனால் நமக்கு என்ன பலன் என்று யோசிப்பதில்லை. சில சூழல்களில் பெரியவர்களும் அப்படி இருக்க வேண்டும். குடும்பத்தினர் அல்லது குழந்தைகளுடன் ஏதாவது விளையாடலாம். குடியிருப்போர் சங்கத்திலோ, சமூக சேவை அமைப்புகளிலோ சேர்ந்து சேவை செய்யலாம். வழக்கமான வேலைகளைத் தாண்டி இப்படி செய்யும்போது மனம் உற்சாகமாகும். புதுப்புது ஐடியாக்கள் வரும்.


● நல்ல நண்பர்களைப் பெறுவது முக்கியம். ஒரேமாதிரி எண்ணமுள்ள நண்பர்களுடன் இணையும்போது, அவர்களின் உதவியுடன் நம் செயல்கள் சிறப்பாக மாறும். இரண்டு, மூன்று நண்பர்கள் இணைந்து ஆரம்பித்தவைதான் இன்ஃபோசிஸ், ஆப்பிள், ட்விட்டர் போன்ற பெரிய நிறுவனங்கள். நல்ல நண்பர்கள் உங்களுக்கும் அவர்களுக்கும் சேர்த்துப் பாதையை உருவாக்குகிறார்கள்.

● சமூகத் தொடர்பு முக்கியம். குழந்தைகள் எங்கு போனாலும் சக குழந்தைகளுடன் சட்டென ஒட்டிக்கொள்வார்கள். அதுபோல எல்லோருடனும் பழகுங்கள். குறிப்பாக உங்கள் துறையில் நிறைய தொடர்புகளை வளர்த்துக்கொள்ளுங்கள். வேலை, தொழில், வியாபாரம் என எதுவாக இருந்தாலும், அதில் பிறரின் பங்களிப்பு முக்கியம். தேவைப்படும் நேரத்தில் எல்லோரிடமும் உதவிகளைப் பெற முடிகிற அளவுக்கு நெருக்கம் காட்டுங்கள். ●


# புதிய ஆரம்பம்

- ஒவ்வொரு புதிய நாளும், உங்கள் வாழ்க்கை என்னும் டைரியின் எழுதப்படாத பக்கம். வெற்றியின் ரகசியம் என்னவென்றால், அந்தப் பக்கத்தில் உங்களால் முடிந்த அளவுக்கு மிகச்சிறந்த வாழ்க்கைக்கதையை எழுதுவதுதான்!
- ஒவ்வொரு கணமும் ஒரு மகத்தான தொடக்கத்தை உருவாக்குவதற்கான நேரம்தான்.
- நீங்கள் வாழ்வில் என்னவாக மாற விரும்பினீர்களோ, அதை அடைவதற்குஇப்போதும்தாமதமாகிவிடவில்லை. உங்கள் வாழ்க்கை குறித்து நீங்கள் பெருமை அடைய வேண்டும். அப்படி வாழ்க்கையை மாற்றும் வலிமை உங்களுக்கு வேண்டும்.
- உங்கள் நினைவுகளை உங்களிடமிருந்து யாரும் பறிக்க முடியாது. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய தொடக்கமே! நல்ல நினைவுகளை அந்த நாட்களில் உருவாக்குங்கள்.
- நம்பிக்கையுடன் முதல் அடியை எடுத்து வையுங்கள். முழுப் பாதையும் உங்கள் கண்களுக்குத் தெரியாமல் போகலாம். ஆனால், முதல் காலடியை எடுத்து வைக்காமல் பாதையைக் கடப்பது சாத்தியமில்லை.
- கடந்த காலத்துக்குச் சென்று மறுபடியும் முதலிலிருந்து வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாது. ஆனால், இந்த நிமிடத்தில் ஆரம்பித்தாலும் மிகச் சிறப்பான வாழ்க்கையை நம்மால் இனி வாழ முடியும்.
- வெற்றியை நோக்கிய பாதையில் பலரும் செய்யும் தவறுகள் இரண்டுதான். ஒன்று, ஆரம்பிக்காமலே இருப்பது. இன்னொன்று, முழுப் பயணத்தையும் செய்துமுடிக்காமல் போவது.
- தோல்வியின் வலி மிகுந்த ஒரு முடிவு ஏற்படுகிறதா? 'புதிய ஆரம்பம் ஒன்றுதான் இப்படி மாறுவேடத்தில் வந்திருக்கிறது' என்று எண்ணுங்கள். அதைக் கொண்டாடுங்கள்.
- தோல்வி என்பது மிகவும் புத்திசாலித்தனமாக மீண்டும் ஒருமுறை வேலையை ஆரம்பித்துச் சரியாகச் செய்வதற்கான வாய்ப்பு.
- எந்த நதியும், தான் ஆரம்பமான இடத்துக்குத் திரும்பிப் போவதில்லை. ஆனால், எல்லா நதிகளுக்கும் ஒரு தொடக்கப்புள்ளி இருக்கிறது.
- ஒவ்வொரு தினத்தின் விடியலும், நம்பிக்கைகள் நிறைந்த புதிய தினத்தை உங்களுக்கு வழங்குகிறது. அன்று புதிதாக எதையும் ஆரம்பிக்கும் மனநிலையுடன் தயாராகுங்கள்.
- 'இதுவும் இன்னொரு நாள்' என்ற மனநிலையுடன் எந்த நாளையும் நினைக்காதீர்கள். ஒவ்வொரு நாளும் ஒரு புதிய ஆரம்பத்துக்கான வாய்ப்பைத் தருகிறது.
- எல்லா நாட்களும் ஒரே மாதிரி கடந்து போனால், நீங்கள் வாழ்வது மிகச்சிறந்த வாழ்க்கை அல்ல. புதிதாக ஏதேனும் ஆரம்பித்துச் செய்யுங்கள்.
- நடந்ததையே நினைத்துக்கொண்டிருந்தால், நீங்கள் கடந்த காலத்தில் வாழ்வதாக அர்த்தம். அதைத் தூக்கிப் போட்டுவிட்டு எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தால், புதிய ஆரம்பம் ஒன்று கிடைக்கும்.
- மிகச்சிறந்த சாதனையாளர்கள்கூட ஏதோ ஒரு காலத்தில் தங்கள் துறையில் ஆரம்பநிலையில் இருந்த சாதாரண மனிதர்கள்தான். எனவே, எதையும் ஆரம்பிக்கத் தயங்காதீர்கள்.

# மொழிகள்!



- சரியான சூழல் அமையட்டும் என்று காத்திருக்காதீர்கள். நீங்கள் ஒரு செயலைச் செய்ய ஆரம்பித்தாலே உங்களுக்குச் சரியான சூழல் தானாக உருவாகிவிடும்.
- காற்று அடிக்கும் போக்கில் சென்று எதை எதையோ செய்துபார்த்து, தங்களின் உண்மையான திறனை அறிந்துகொண்டவர்கள் பலர் உண்டு. எந்தச் சூழலிலும் எதையும் செய்யாமல் சும்மா இருக்காதீர்கள்.
- ‘அவ்வளவுதான், எல்லாம் முடிந்துவிட்டது. எனக்கு இனி எந்த வாய்ப்பும் இல்லை’ என்று தளர்ந்து போகும் நேரத்தில் ஏதோ ஒரு வெளிச்சம் உங்களுக்கு வாய்க்கும். அந்தத் திசையில் பயணம் செய்யுங்கள்.
- நினைத்தது போல ஒரு விஷயம் நடக்காவிட்டால் விதியின்மீது பழியைப்போடாதீர்கள்.உங்கள் முயற்சியே எந்தத் தடையையும் புதிய வெற்றிப்பாதையாக மாற்றிக் காட்டும்.
- எல்லோரையும் மன்னிப்பதும், எல்லாவற்றையும் மறப்பதும், உங்களுக்குப் புதிதாக எதையும் ஆரம்பிக்க இன்னொரு வாய்ப்பை வழங்கும்.
- நேற்றைய தவறுகளை நினைக்காதீர்கள். இன்று புதிதாக ஆரம்பிக்க சிறந்த நாள் என்று நினையுங்கள். நாளை சிறந்த எதிர்காலம் அமையும்.
- உங்கள் கடந்த காலங்கள் எவ்வளவு மோசமானதாக இருந்தாலும், இன்று நம்பிக்கையுடன் ஒரு செயலைச் செய்ய ஆரம்பித்தால், நாளை உங்களுக்கு இனிய காலம் வரும்.



- எல்லாப் பிரச்னைகளையும் தோல்விகளையும் மறந்துவிட்டுப் புதிதாக ஒரு செயலை ஆரம்பிக்க நீங்கள் தயாராக இருந்தால், இந்தப் பிரபஞ்சத்தில் எதுவும் உங்களைத் தடுக்காது.
- வாழ்க்கையில் சவால்கள் சூறாவளி போலச் சுழற்றியடித்தால், அவற்றை எதிர்த்துப் போராடாதீர்கள். அந்தக் காற்றின் திசையில் புதிய பயணத்தை ஆரம்பித்துவிடுங்கள்.
- ஒவ்வொரு புதிய தினமும் இறைவன் அளிக்கும் ஆசிர்வாதம். அந்த நாளில் புதிதாக எதைச் செய்தாலும் உங்கள் வாழ்க்கை அழகாக மாறும்.
- எங்கும் தேங்கி நின்றுவிடாமல் ஏதோ ஒரு திசையில் புதிய பயணத்தை ஆரம்பித்துவிடுங்கள். பயணத்தின் முடிவில் ஒரு புதிய பாதை உங்களுக்காக உருவாகியிருக்கும்.
- நேற்றைய நம் பயணத்தில் நாம் விரும்பிய உயரத்தை அடையத் தவறியிருக்கலாம். ஆனால், இன்று மீண்டும் முயன்றால் அதை அடைவதற்கு நம்மால் முடியும்.
- நமக்கு நிறைய தினங்களும் மாதங்களும் வருடங்களும் தொடர்ச்சியாக அளிக்கப்படுகின்றன. நாம் நிறைய விஷயங்களைப் புதிது புதிதாக ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகவே இவை வருகின்றன.
- நாம் உயிர்ப்புடன் இருக்கும்வரை, எதையும் புதிதாக ஆரம்பித்துச் செய்வதற்கு எந்தத் தடையும் நமக்கு இல்லை. ●



# கேள்விகளால் வாழ்வை ஆரம்பிக்கலாம்!

ஒரு கிராமத்துக்கு ஆசிரமத்தில் இருக்கும் துறவி சக்தி வாய்ந்தவர் என்று கேள்விப்பட்டு அவரைச் சந்திக்க வந்தார் சுற்றுலாப் பயணி ஒருவர். ஆசிரமத்துக்குள் போய் துறவியைப் பார்த்ததும் திகைத்துவிட்டார். ஒரு சிறிய குடிசை. அதில் தரை விரிப்பில் துறவி அமர்ந்திருந்தார். அருகில் ஒரு விளக்கு, கையில் ஒரு புத்தகம், வேறு எதுவுமே இல்லை.

“உங்கள் பொருட்கள் எங்கே?” என்று துறவியிடம் அவர் கேட்டார். “உங்கள் பொருட்கள் எங்கே?” என்று துறவியும் திருப்பிக் கேட்டார். “நான் ஒரு சுற்றுலாப் பயணி, எனக்கு எதற்குப் பொருட்கள்?” என்றார் வந்தவர். துறவி சிரித்து, “நானும் ஒரு பயணிதான். இந்த உலகைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறேன். இந்த உண்மை தெரிந்தபிறகே என் வாழ்க்கை புதிதாக ஆரம்பித்தது” என்றார்.

சரியான கேள்விகளைக் கேட்பதன் மூலம் உங்கள் வாழ்க்கை புதிதாக ஆரம்பமாகும். வாழ்வில் புது அர்த்தம் தேடவும், அந்தப் புதிய பயணம் குறித்த தெளிவு பெறவும் இந்தக் கேள்விகள் உதவும்.

- இந்தப் புதிய ஆரம்பத்துக்கு மனத்தளவில் நான் தயாராக இருக்கிறேனா? என் தற்போதைய மனநிலை என் வாழ்க்கையைப் பாதிக்காமல் இருக்கிறதா?
- என்னை நினைத்து நான் பெருமைப்படும் விஷயங்கள் எவை? என்னிடம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கும் விஷயங்கள் எவை?
- வாழ்வில் ‘இதுவே போதும்’ என்று திருப்தி அடையாமல், எப்போதாவது நான் ரிஸ்க் எடுத்திருக்கிறேனா? இப்போது ரிஸ்க் எடுக்க நான் தயாரா?
- இனிமேலும் நான் இப்படியே வாழ்ந்தால் என்ன ஆகும்? மாற்றங்களுடன் புதிதாக வாழ்க்கையை ஆரம்பித்தால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும்?
- வேலை, தொழில், வியாபாரம் என்று நான் இப்போது செய்யும் எதுவாக இருந்தாலும், அது எனக்கு என்ன கொடுக்கிறது? இதிலிருந்து மாறினால் எனக்குக் கிடைப்பது என்ன?
- என் பலம் என்று நான் எதை நினைக்கிறேன்? அதை என் செயல்களில் போதுமான அளவு பயன்படுத்துகிறேனா?
- இப்போது நான் வாழும் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது? அதில் எதெல்லாம் பிடிக்கவில்லை. அவை மாற வேண்டும் என்று ஆசைப்படுகிறேனா?
- என் வாழ்வில் எவையெல்லாம் என் கட்டுப்பாட்டில் இருக்கின்றன? எவற்றையெல்லாம் என்னால் மாற்ற முடியாது?
- எத்தனை விஷயங்களை நான் மாற்றிக்கொள்ள வேண்டும்? அவற்றில் எதெல்லாம் கடினம்?
- வாழ்வின் கடைசிக்காலத்தில் இருப்பதாக ஒருவேளை நினைத்துக்கொண்டால், இப்போது நான் செய்வதையே செய்வேனா? அல்லது மாற வேண்டும் என நினைப்பேனா?
- என் நேரத்தையும் பணத்தையும் என்னை மேம்படுத்திக்கொள்வதற்குப் போதுமான அளவு முதலீடு செய்கிறேனா?
- வாழ்வில் எதற்கெல்லாம் நான் முன்னுரிமை கொடுக்கிறேன்? என் உடல்நலமும் மனநலனும் பொருளாதார நலனும் முக்கியம் என்று நினைக்கிறேனா?

இந்தக் கேள்விகளுக்கு நேர்மையான பதில்களைத் தேடுங்கள். உங்கள் வாழ்க்கை சிறப்பானதாக மாறும்.




# மறுபடியும் ஓர் ஆரம்பம்!

மழைக்காலம் முடிந்து பனிக்காலம் வந்து மீண்டும் கோடைக்காலம் வருகிறது. பருவங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. நம் வாழ்க்கையும் அப்படி மாறியபடி இருக்கிறது. அதனால்தான் மனிதர்கள் அவ்வப்போது புதுப்புது ஆரம்பங்களை எதிர்கொள்கிறார்கள்.

சிலருக்கு மகிழ்ச்சியான தருணங்களில் புதிய ஆரம்பம் கிடைக்கும். திருமணம், புது வீட்டில் குடியேறுவது, புதிதாக வேலையில் சேர்வது, பதவி உயர்வு கிடைப்பது, தொழிலை விரிவுபடுத்துவது என்று அந்தப் புதிய ஆரம்பம் இருக்கும். சிலருக்கு நெருக்கடியான சூழல்களே, புதிய ஆரம்பத்துக்கான கட்டாயத்தை உருவாக்கும். தொழிலில் இழப்பு, வேலை இழப்பு, அறிமுகம் இல்லாத வேறு ஒரு பிரதேசத்தில் வேலை செய்யப் போவது, விவாகரத்து, பணி ஓய்வு என்று ஏதோ ஒரு வாழ்க்கை மாற்றம் நிகழ்ந்து தடுமாறுவார்கள் அவர்கள்.

மாற்றம் ஒன்றே மாறாதது. அனுபவங்கள் கூடக்கூட, நாம் முன்பைவிடச் சிறப்பானவர்களாக மாற வேண்டும். சிறந்த வாழ்க்கையை வாழ வேண்டும். அதற்குப் புதிய ஆரம்பங்கள் உதவும். மகிழ்ச்சியாகவோ, வருத்தமாகவோ, எப்படிப்பட்ட சூழலில் புதிதாக ஒன்றை ஆரம்பித்தாலும் சில விஷயங்களை மனத்தில் நினைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எதை இழந்தாலும், இதுவரை கற்றுக்கொண்ட எல்லாமே உங்களுடன் இருக்கும், அனுபவங்களும் கைகொடுக்கும். வாழ்வில் சம்பாதித்த நட்பும் உறவுகளும் உடன் இருக்கும்.

**புதிய ஆரம்பத்தில் நீங்கள் செய்ய வேண்டிய ஏழு விஷயங்கள் இங்கே:**

- உங்கள் வாழ்க்கை இப்போது எந்த இடத்தில் இருக்கிறது என்று உங்களுக்குள் கேட்டுக்கொள்ளுங்கள். இங்கிருந்து நான் எங்கே செல்ல நினைக்கிறேன், இந்த நேரத்தில் புதிய ஆரம்பம் சாத்தியமா, அதை நான் எப்படி செய்யப்போகிறேன் என்று பதில் தேடுங்கள். உங்கள் சூழலை முதலில் ஆராய்வது நல்லது.
- நம் எண்ணங்கள் கால ஓட்டத்தில் மாறிக்கொண்டே இருக்கும். பள்ளிப் பருவத்தில் பெரிதும் மதித்த ஒரு விஷயம் இப்போது மதிப்பிழந்து போய் இருக்கும். இப்படி உங்களின் வயது, வாழ்க்கை நிலை, சூழல் ஆகியவற்றைப் பொறுத்து எல்லாமே மாறும். இப்போது நீங்கள் எதைப் பெரிதாக மதிக்கிறீர்கள், முக்கியமான எதையெல்லாம் அலட்சியம் செய்தீர்கள், எதையெல்லாம் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அலசுங்கள். மாறவும் செய்யுங்கள்.
- புதிய வாழ்க்கையில் உங்களின் இலக்கு என்னவாக இருக்கப் போகிறது என்று நிர்ணயம் செய்யுங்கள். அதைச் சின்னச்சின்ன பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள். ஒவ்வொன்றையும் அடைவதற்கான வழியைத் திட்டமிடுங்கள்.
- இத்தனைக் காலம் இருந்தது போலவே இருந்துகொண்டு புதிதாக எதையும் ஆரம்பிக்க முடியாது. உங்களுக்குள் நிறைய மாற்றங்கள் நிகழ வேண்டும். துணிச்சலுடன் எல்லா மனத்தடைகளையும் உதறிவிட்டு மொத்தமாக மாறுங்கள்.
- தயங்கியும் தேங்கியும் நிற்காமல் செயலில் இறங்குங்கள். வெறுமனே யோசித்துக்கொண்டே இருந்தால் எதுவும் மாறாது.
- நண்பர், உறவினர், தொழிலில் சீனியர் என்று யாரோ ஒரு வழிகாட்டியைத் தேடுங்கள். சாலையோர மைல்கல் போல அவர் உங்களுக்கு வழிகாட்டுவார்.
- வாழ்க்கைப்பாதை மேடு, பள்ளங்கள் கொண்டதுதான். பின்னடைவுகளில் சோர்ந்து போக வேண்டாம், முன்னேற்றங்களில் ஆர்ப்பாட்டமும் வேண்டாம். கடந்த மாதத்தைவிட இப்போது முன்னேறி இருக்கிறோமா என்று அவ்வப்போது சுயபரிசோதனை செய்யுங்கள். ●

## வாழ்க்கை மாறும்!

நீங்கள் ஒரு செயலைப் புதிதாக ஆரம்பிக்கும்போது உங்கள் வாழ்க்கையே மாறும். அதற்கு நீங்கள் என்னென்ன செய்ய வேண்டும்?

- செய்யும் எதையும் துணிச்சலுடன் செய்யுங்கள். இதுவரை உங்களை வெற்றிபெற விடாமல் தடுத்தது உங்கள் பயம்தான். துணிச்சலுடன் எந்தச் சவாலையும் எதிர்த்து நிற்கும்போது வெற்றி கிடைக்கும்.
- எப்போதும் சிந்திப்பது போன்ற வழக்கமான சிந்தனை உங்களுக்குள் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. எனவே, உங்களின் சிந்தனையும் தெளிவாக மாற வேண்டும்.
- நீங்கள் தினம் தினம் செய்யும் செயல்களே உங்களின் பண்புகளைத் தீர்மானிக்கும். தீர்க்கமான முடிவுடன் சரியான செயல்களைச் செய்தால், உங்களிடம் நேர்மறையான பண்புகள் உருவாகும்.
- உங்கள் பழக்கவழக்கங்களும் நேர்மறையாக மாற வேண்டும். பயன்படுத்தும் வார்த்தைகள் முதல், மற்றவர்களுக்குச் சொல்லும் பதில்கள் வரை எல்லாமே உற்சாகமும் பாசிட்டிவிட்டியும் நிறைந்ததாக இருக்க வேண்டும்.

## எது ஆரம்பம்?

இருத்தலுக்கும் வாழ்தலுக்கும் வித்தியாசம் உண்டு. சிறையிலிருந்து விடுதலையாகும் கைதி, “சிறையில் இருந்தேன்” என்றே சொல்வார். “சிறையில் வாழ்ந்தேன்” என்று சொல்லமாட்டார். காரணம், சிறையில் அவர் விரும்பிப் போய் இருக்கவில்லை. விருப்பத்துடன் ஒருவர் வாழ்வதே வாழ்க்கை. பிறரைச் சார்ந்து இல்லாமல், நாம் விரும்பியபடி வாழ்வதே சிறப்பான வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் நாம் எதையும் ஆரம்பித்துச் செய்ய முடியும்.

பலரும் நிகழ்கால வாழ்க்கையை வாழ்வதில்லை. பள்ளிப் பருவத்தில், ‘கல்லூரி போனபிறகே வாழ்க்கை ஆரம்பமாகும்’ என்று நினைக்கிறார்கள். கல்லூரி நாட்களில், ‘படித்து முடித்து வேலைக்குப் போனதும் வாழ்க்கை வசப்படும்’ என்று நம்புகிறார்கள். வேலைக்குச் சென்றபிறகு, ‘திருமணம் ஆனதும் வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்’ என்று கனவு காண்கிறார்கள். குழந்தைகள், சொந்த வீடு, பதவி உயர்வு, கார் என்று ஒவ்வொன்றின் மீதும் இந்தக் கனவை மாற்றி வைக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையை ஆரம்பிப்பதே இல்லை. புதிய ஆரம்பத்தைத் தள்ளிப் போட்டு, தள்ளிப் போட்டு முதுமையை அடைகிறார்கள்.

இந்தக் கணத்தில் வாழப் பழகினால் மகிழ்ச்சி நிரந்தரமாகும்.



## ஒளியைத் தேடுங்கள்!

வாழ்வில் புதிய ஆரம்பத்தைத் தேடும்போது உங்கள் பழைய வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மறக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதுதான் யதார்த்தம். அந்த அனுபவங்கள்தான் உங்கள் நிகழ்கால முடிவுகளைத் தீர்மானிக்கும். சூடுபட்ட பூனை மீண்டும் பால் குடிக்கப் பயப்படுவது போல, முன்பு மோசமான அனுபவங்களைத் தந்த சில செயல்களைச் செய்வதற்கு நீங்கள் பயப்படுவீர்கள்.

ஆனால், இரண்டு விஷயங்களை எப்போதும் மறக்காதீர்கள். இதுவரை செய்யாத செயல்களைச் செய்யுங்கள். நேர்மறையான சிந்தனையுடன் அவற்றைச் செய்யுங்கள். ‘எல்லாவற்றையும் சந்தேகப்படுங்கள், உங்களுக்கான ஒளியை நீங்களே தேடுங்கள்’ என்று புத்தர் சொன்னார். உங்கள் வாழ்க்கையை எப்படி மாற்றுவது என்று வழி தேடுங்கள். உங்களுக்கு எது முக்கியம், எதை உங்களால் செய்ய முடியாது, உங்கள் சூழ்நிலை என்ன என்பதையெல்லாம் அலசிப் பார்த்து இதைச் செய்யுங்கள். ‘இதற்கு மேல் என்னால் எதுவும் செய்ய முடியாது’ என்று உங்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களை எந்த உயரத்துக்கும் கூட்டிச் செல்லும்.



# போராட்டத்தில் வெல்லுங்கள்!

உங்களுக்குள் ஒரு வலிமையான மனிதரும், ஒரு பலவீனமான மனிதரும் இருக்கிறார்கள். இந்த இருவருக்கும் நிகழும் ஓயாத போராட்டமே உங்கள் வாழ்க்கை. உங்களுக்குள் இருக்கும் வலிமையான மனிதர் பக்கம் நீங்கள் நிற்கும்போது, ஒரு சிறந்த ஆரம்பம் உங்களுக்குக் கிடைக்கும்.

உங்கள் எதிர்காலத்துக்கு எது தேவை, எதைச் செய்வது சாத்தியம், எதில் உங்கள் கவனம் இருக்க வேண்டும் என எல்லாம் அறிந்து செய்யுங்கள். போகியில் பழைய குப்பைகளைத் தூக்கிப் போட்டுவிட்டுப் பொலிவாகும் புது வீடு போல இருங்கள். பழைய நம்பிக்கைகள், பழைய அறிவு எல்லாவற்றையும் துறந்துவிட்டுப் புதிதாகத் தேடிப் பெறுங்கள். புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள் வேலையில் ஒரு நெருக்கடி ஏற்படும்போது, அதைப் பிரச்னையாக நினைக்காதீர்கள். சவாலாக நினைத்துப் பாருங்கள். அதைக் கடந்து வருவதற்கான தீர்வு உங்கள் கண்களுக்கு உடனடியாகத் தெரியும்.








# வெற்றியின் ரகசியம்!

“உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?” என்று ஒரு தொழிலதிபரிடம் கேட்டார்கள். “இரண்டே வார்த்தைகளில் சொல்லலாம்” என்றார் அவர். அந்த இரண்டு வார்த்தைகள், “சரியான முடிவுகள்!” சரி, “நீங்கள் எப்படி சரியான முடிவுகளை எடுத்தீர்கள்?” என்று கேட்டதற்கு, “ஒற்றை வார்த்தையில் அதற்கான பதிலைச் சொல்லலாம். அது, அனுபவம்” என்றார். அந்த அனுபவத்தை எங்கிருந்து அவர் பெற்றார் என்று கேட்டபோது, “இரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லலாம், ‘தவறான முடிவுகள்’ என்பதுதான் அந்த பதில்” என்றார்.

நீங்கள் எதைச் செய்ய ஆரம்பித்தாலும், இரண்டு விஷயங்களை உறுதியாக நம்புங்கள். 1. யாரோ ஒருவரால் இதைச் செய்ய முடிந்தபோது, நம்மால் ஏன் முடியாது? 2. அது இதுவரை யாருமே செய்யாத விஷயமாக இருந்தால்கூட, ‘இதைச் செய்யும் முதல் மனிதராக நாம் ஏன் இருக்கக்கூடாது’ என்று நினையுங்கள்.

வெற்றிக்கு வேறு எந்தக் குறுக்கு வழியும் இல்லை. நீங்கள் ஏதோ ஒன்றை ஆரம்பிக்கும்போது, சூழ்நிலை உங்களை எங்கோ அழைத்துச் செல்லும். ‘முடியாது’ என்று சொல்வது போல எந்தச் செயலும் இங்கு இல்லை. கடின உழைப்பும், சரியான வாய்ப்பும் சந்திக்கும் இடத்தில், வெற்றி வசமாகும். கடினமாக உழைத்தாலும் சரியான வாய்ப்பு வரவில்லையா? அதை நீங்களே உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை.



# கடைசி பெஞ்ச் மாணவன்!

சரவணன் பள்ளிக்கூடத்துக்கு வேண்டா வெறுப்பாகவே வருவான். அவனுக்குப் படிக்கவே பிடிக்காது. எல்லாப் பாடங்களிலும் அவன் 20 மதிப்பெண்கள் வாங்கினாலே பெரிய விஷயம். எப்போதும் கடைசி பெஞ்ச்சில்தான் உட்காருவான். பெரும்பாலும் ஆசிரியர் பார்க்காதபடி அமைதியாகக் கண்களை மூடித் தூங்கிவிடுவான்.

அங்கு உட்காரும் அவனைப் போன்ற இரண்டு மக்குப் பையன்கள் மட்டுமே அவன் நண்பர்கள். அவர்களிடம் மட்டும்தான் பேசுவான். வகுப்பில் மற்றவர்கள் எல்லோரும் அவனைக் கண்டாலே விலகிப் போவார்கள். அவனுடன் பேசுவதற்கு அவர்களுக்கு எந்த விஷயமும் இல்லை. பள்ளியில் பல ஆசிரியர்களும் அவனைத் திருத்த முயன்று தோற்றுவிட்டார்கள்.

காலாண்டுத் தேர்வு முடிந்து வகுப்பு ஆசிரியர், எல்லோருக்கும் ரேங்க் கார்டு கொடுக்கும் நாள் வந்தது. வழக்கமாக நல்ல மதிப்பெண் எடுக்கும் மாணவர்கள் சிலரும் அந்தத் தேர்வில் மதிப்பெண் குறைவாக வாங்கியதற்காக அவர் கோபித்துக்கொண்டார்.

கடைசியாக சரவணனைக் கூப்பிட்ட அவர், “இவன்தான் நம்ம கிளாஸ்லயே குறைவான மார்க் வாங்கியிருக்கான். எல்லாப் பாடத்துலயும் ஃபெயில். நீங்களும் ஒழுங்காப் படிக்கலைன்னா இவனை மாதிரி முட்டாளா, சோம்பேறியா ஆகிடுவீங்க. அப்புறம் தெருத்தெருவா வெயில்ல அலைஞ்சு கூலி வேலைதான் செய்யணும்” என்றார். வகுப்பில் எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

இத்தனை நாள் ஆசிரியர்களோ, சக மாணவர்களோ அவனைக் கண்டுகொள்ளாமல் கடந்துபோனது அவனை உறுத்தியதில்லை. ஆனால், இப்படி எல்லோரது முன்னிலையிலும் அவமானப்படுவது அவனுக்குப் புதிது. தன் இடத்தில் போய் உட்கார்ந்தபோது அவனுக்குக் கண்ணீர் வந்தது.

‘இவ்வளவு மோசமான முன்னுதாரணமாகவா நாம் இருக்கிறோம்! எல்லோரும் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்களே... இதை மாற்ற என்ன வழி’ என்று யோசித்தான். அவன் சோம்பேறியாக இருந்தானே தவிர, படிப்பில் மக்கு இல்லை. அன்று முதல் வீட்டுக்குப் போனதும் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தான். படித்ததை எழுதிப் பார்த்தான். அழுக்குப் படிந்த கண்ணாடியைத் துடைத்ததும் பளபளவென மின்னுவது போல அவனுக்குள் அறிவுச்சுடர் மின்னியது. வீட்டில் தினமும் பல மணி நேரம் படிப்பதும் எழுதுவதுமாக இருந்த அவனை, பெற்றோர் ஆச்சர்யமாகப் பார்த்தார்கள்.

அடுத்த மாதம் நடந்த தேர்வில் சரவணன் அத்தனை பாடங்களிலும் நல்ல மதிப்பெண்கள் பாஸ் ஆகியிருந்தான். வகுப்பு ஆசிரியருக்கு ஆச்சர்யம். ஒருநாள் பாடத்தில் அறிவியல் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு மற்ற யாருமே பதில் சொல்லமுடியாதபோது, அவன் சரியான பதிலைச் சொன்னான். “நீ முன்னால வந்து உட்காரு” என்று அவனுக்கு முன்பக்க வரிசை ஒன்றில் இடம் ஒதுக்கிக் கொடுத்துப் பாராட்டினார் அவர். மற்ற மாணவர்கள் அவனுடன் பேச போட்டி போட்டார்கள். மாணவிகள் அவனிடம் வந்து சந்தேகம் கேட்டார்கள்.

அரையாண்டுத் தேர்வில் சரவணன்தான் வகுப்பில் முதல் ரேங்க். “எல்லோரும் சரவணன் மாதிரி படிக்கணும்” என்று சொன்ன வகுப்பு ஆசிரியர், அவன் பக்கம் திரும்பி, “சரவணா, அன்னைக்கு நான் உன்னை ரொம்ப அவமானப்படுத்திட்டேன். என்னை மன்னிச்சிடு” என்றார்.

சரவணன் பதறி, “சார், அப்படிச் சொல்லாதீங்க. அப்போ நீங்க அப்படி பேசினதால்தான் நான் புதுசா படிக்க ஆரம்பிச்சு இப்படி ஆகியிருக்கேன்” என்றான்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


முயற்சியும்
பயிற்சியும்
தொடர்ந்தால்
வெற்றி நமதே!!
Inners for Winners
RAMRAJ ©
BANIANS
BRIEFS • TRUNKS
Shreyas Iyer - Cricketer
SCAN QR CODE FOR
STORE LOCATION
SUKRA® SUPER FINE COTTON VESTS
ROMEX® SUPERIOR BANIANS
RISE-UP® PREMIUM BANIANS
ACOSTE® LUXURY INNERWEARS
Breeze® Eye Let Vests
WinStripe® STRIPED BANIANS
ARCHERY® GYM VEST
COMPACT® PREMIUM COTTON RIB VESTS
suriya® HIGH WAIST BRIEF
udaya® MID WAIST BRIEF
minar® FINE COTTON BRIEF
merc® LOW WAIST MERCERISED BRIEF
target® SUPER COTTON FINE TRUNKS
softex® B/P FINE TRUNKS
imaxs® RIB POCKET TRUNKS
ARROW® SAFETY POCKET RIB TRUNKS
VINTRACK® SUPER COTTON MINI TRUNKS
Available @ Ramraj Showrooms & All Leading Textile Shops | Shop Online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-01-2024. Posted at Tirupur BPC on 5th of every month.

